விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 23 வியாழக்கிழமை (07.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 19

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## ஏ–9 ஊடாக 24 மணிநேர போக்குவரத்து; உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு

### பசில் ராஜபக்ஷ எம்.பி. நேற்று அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏ-9வீதியூடாக நேற்று நள்ளிரவு முதல் 24மணி நேரமும் பயணம் செய்யலாம் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் தற்போதுள்ள உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் 75 வீதமானவை எதிர் வரும் 10ஆம் திகதி முதல் நீக்கப்பட்டு மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ பல்வேறு வைபவங்களில் சமூகப்பிரதிநிதிகளையும் சந்தித்தார்.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு அறிவித்தல்களை விடுத்தார்.பலாலி விமான நிலையத்திற்கு நேற்றுக்காலை வந்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்நாடாளுமன்றஉறுப்பினர் பசில் ராஜபக்ஷவை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் (16ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்தவின் மற்றொரு ஆட்சியை தமிழ்க் கூட்டமைப்பு அனுமதிக்காது

### நிலைப்பாட்டை விளக்குகிறார் சம்பந்தன்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் ஒரு தடவை பதவியில் இருக்க அனுமதிப்பதை தமிழ்க் கூட்டமைப்பு ஏகோபித்து எதிர்ப்பதனால் பொது எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொள்கின்றனர் என அக்கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)



## டெங்கு நோயினால் மாணவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயினால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவன் நேற்று மரணமடைந்துள்ளார்.

அரசடி வீதி நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த கிருஷ்ணன் தர்சன் (வயது 17) என்பவர் கடந்த 2 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் டெங்கு காய்ச்சலினால் அனுமதிக்கப்பட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு–கிழக்கு மீண்டும் இணைக்கப்பட மாட்டாது

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீளவும் இணைக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். தமது ஆட்சிக் காலத்தில் வடக்கு கிழக்கை மீள இணைக்கும் திட்டத்திற்கு இடமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்க்கட்சியின் சில சக்திகள் வடக்குக்கிழக்கில் பிரசாரங்களை மேற்கொள்ளும் போது போலியான வாக்குறுதிகளை அளித்து (16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு!

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது கிழக்கு மாகாண தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு வழங்குவார்கள் என அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்தவுக்கே ஆதரவுவழங்கப்போவதாக இவர்கள் தன்னிடம் கூறியதாக அமைச்சர் (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா-கூட்டமைப்பு பேச்சு பின்னணியில் வெளிநாட்டுச் சதி!

### அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்கும் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் இடையில் இடம் பெற்ற பேச்சு வார்த்தையின் பின்னணியில் சதித்திட்டங்கள் காணப்படுவதாக ஊடகத்துறை அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்த்தன குற்றம் சுமத்துகின்றார். நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு–கிழக்கு இணைக்கப்படும்; கூட்டமைப்பிடம் பொன்சேகா உறுதி

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் வடக்கு கிழக்கு இணைப்பை கூட்டமைப்பு வலியுறுத்தியதாகவும் அதனை பொன்சேகா ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிபந்தனையுடன் கூடிய ஆதரவுகளையே தமிழ்த் தேசிய (16ஆம் பக்கம் பார்க்க)

டெங்கு காய்ச்சல்...! டெங்கு காய்ச்சல்...! அசமந்தம் வேண்டாம்! அசமந்தத்தின் ஒவ்வொரு கணமும் துன்பத்தில் முடியலாம்.

பாடசாலைகள், பொது அமைப்புக்கள், அரச நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் என அனைத்து அமைப்புக்களும் ஒன்றிணைந்து இரு நாள் பிரகடனத்தில் சுற்றுச் சூழலைத் தூய்மைப்படுத்தினால் 'டெங்கு' தரும் மரணத்திலிருந்து எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள முடியும்.

–வலம்புரி

# மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; கன்றுக்குட்டி மரணம்-இளைஞர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

கன்றுக்குட்டி குறுக்கே பாய்ந்ததில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் படுகாயமடைந்ததுடன் கன்றுக் குட்டியும் மரணமடைந்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 6 மணியளவில் நாவற்குழியில் இடம் பெற்றுள்ளது.

அதேஇடத்தைச் சேர்ந்த ஜோன்சன் போல் லோசின்டன் நிறோல்போல் (வயது18), பிராங்கில் கஸ்றோ (வயது18) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது வீதிக்கு குறுக்கே கன்றுக் குட்டி பாய்ந்ததில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் தலை மற்றும் கால் பகுதிகளில் பலத்த காயங்களுக்கிலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவ்விபத்தில் கன்றுக்குட்டி சம்பவ இடத்திலேயே இறந்துள்ளதாகவும் கூறப்பட்டது. (ச-7,30)

# வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களின் தகைமைகளை பரிசீலிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் ஆலோசனையின் பிரகாரம் வலி.கிழக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித்தகைமைகளை பரிசீலிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை வலி.கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முன்பள்ளி ஆசிரியர்கள் கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ், பிறப்பத்தாட்சிப் பத்திரம், சேவைக்காலத்தினை உறுதிப்படுத்தும் சான்றிதழ், அடையாள அட்டை ஆகிய ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் நிழற் பிரதி என்பவற்றுடன் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் சமுகமளிக்குமாறு வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் கேட்டுக்கொள்கின்றார்.

அச்சுவேலி-காலை 09.30, உரும்பிராய்-காலை 10.30, கோப்பாய்-காலை 11.30, நீர்வேலி-12.30, புத்தூர்-01.30 போன்ற நேர ஒழுங்குகளில் இந்நிகழ்வு நடைபெறும். (சி)

# 'வணக்கம் நான் உங்கள் பொன்சேகா' தொலைபேசியில் தேர்தல் பிரசாரம்

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்கள் மிகவும் சூடுபிடித்துள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்மக்களின் வாக்குகளைப் பெறுவதில் மிகவும்மும்முரமாக செயற்படுகின்றனர்.

தமிழ் மக்களின் வாக்குகள் இலங்கையில் 6வது ஜனாதிபதியை தீர்மானிக்கும்முக்கிய காரணிகளில் ஒன்றாக கருதப்படுவதால் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதில் பிரதான இரண்டு வேட்பாளர்களும் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த வகையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா மக்களின் வாக்குகளைக் கோரும் முகமாக தொலைபேசி செய்தி சேவையொன்று நேற்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

0117 808 400என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் பதிவு செய்யப்பட்ட சரத் பொன்சேகாவின் செய்தியை செவிமடுக்கலாம்.

இந்த செய்தியில், தான் ஜெனரல் சரத் பொன்சேகா என அறிமுகப்படுத்தும்பொன்சேகா தனது செய்தியை கூறுகின்றார். சரத் பொன்சேகா தொலைபேசி ஒலிப்பதிவில் தெரிவித்த உரை வருமாறு,

வணக்கம்! நான் உங்கள் சரத் பொன்சேகா, யுத்தத்தின் வழியை நன்கு அறிந்த படைவீரனாகவும் இத்தனை நாளும் வழி நடத்தி வெற்றியை ஈட்டிக் கொடுத்த தளபதியாகவும் உங்கள் முன் நிற்கின்றேன். இன்று நாம் யுத்தத்தை வென்றுவிட்டோம் . இனி சமாதானத்தின் நன்மைகளை மக்களுக்கு அடையும்படி செய்ய வேண்டும்.

நான் ஒரு அரசியல்வாதியல்ல, ஆனாலும் கடமை உணர்வும் உங்கள் ஒத்துழைப்பும் இவ்வெற்றியை சமாதானத்தின் வெற்றியாகவும் பொருளாதார வளர்ச்சியாகவும் உருவாக்கி நலன் பெறமுடியும். இதையடைய நல்ல அரசியல் அமைப்பை உருவாக்கவும், பொது சொத்துக்கள் அல்லது பொது செல்வங்கள் வீணாவதை நிறுத்தப்படவும், அரசியல் ஊழல்கள் அடியோடு அழியவும் மனித உரிமைகளை மீறும் அநேக சக்திகள் ஒழியவும் புதிய இலங்கை யை உருவாக்கவும் என்னுடன் இணைந்து உங்கள் ஒத்துழைப்பை தாருங்கள். நன்றி வணக்கம். (ச-5)

# நயினாதீவு கடற்பரப்பில் மர்மப் பொருள் மிதப்பு



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு கடற்பரப்பில் மர்மப் பொருள் ஒன்று கடந்த ஒரு வாரமாக காணப்படுகின்றது. சுமார் 40 அடி நீளமான இப் பொருள் தொடர்பாக கடற்றொழிலாளர்கள் கடற்படையினருக்கு வழங்கிய தகவலையடுத்து கடற்படையினரும் அப் பொருளைப் பார்வையிட்டுள்ளனர்.

எனினும் அச்சம் காரணமாக எவரும் அருகில்செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவ் மர்மப்பொருளைக் கடற்படையினர் கண்காணித்து வருவதாகத் தெரிவிக் கப்பட்டது.


## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies

***Registration For Postgraduate Research Programmes***
***M.Phil & Ph.D-2010/2011***

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil) and Doctor of Philosophy(Ph.D) Degree Programmes offered by the Faculty of Graduate Studies,University of Jaffna.

Relevant information and prescribed application forms can be obtained from the Assistant Registrar,Faculty of Graduate Studies,University of Jaffna (T.P.No.:021 222 3608)on production of a receipt in support of a payment of Rs.200/= to the University Account number 90501at the People's Bank ,University Branch,Thirunelvely or forwarding a money order of Rs.200/= drawn in favour of "The Bursar,University of Jaffna".Requests by post should be accompanied by a self -addressed envelope not less than 23x10c.m.in size affixing stamps to the value of Rs.15/=.

Duly completed applications should be sent to the Assistant Registrar ,Faculty of Graduate Studies on or before 15th February 2010.Late and incomplete applications will not be considered.

**Registrar**
**05/01/2010**
(C-4152)


# ஹயூரிச்-ஜோன்சன் பந்துவீச்சில் சிக்கி பாகிஸ்தான் எதிர்பாராத தோல்வி; ஆஸி.அணி தொடரைத் தனதாக்கியது

(சிட்னி)

ஹயூரிச்-ஜோன்சன் ஜோடியின் துல்லியமான பந்து வீச்சில் சிக்கிய பாகிஸ்தான் அணி 2-வது டெஸ்டில் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட்; 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரேயொரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இத் தொடரில் கடந்த வாரம் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந் நிலையில் 2-வது டெஸ்ட் கடந்த 3 ஆம் திகதி சிட்னியில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 127 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 333 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இந் நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 206 ஓட்டங்கள் வித்தியாசத்தில்பின்னிலையில் இருந்த அவுஸ்திரேலிய அணி 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன் தினம் 3 ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 4 ஆம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மைக்கல் ஹசியின் சதத்தின் மூலம் 2-வது இன்னிங்ஸில் 381ஓட்டங்களைஎடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 134 ஓட்டங்களையும் வோட்ஷன் 97 ஓட்டங்களையும் சிடில் 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் டனேஷ் கனேரியா 5 விக் கெட்டுக்களையும் உமர் குல் 3 விக்கெட்டுக்களையும் ஆஷிப் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இந் நிலையில் 2-வது இன்னிங்ஸில் 176 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஹயூரிச்-ஜோன்சன் ஜோடியிடம் சிக்கி 139 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் உமர் அக்மல் 49 ஓட்டங்களையும் பர்காத் 22, பட் 21 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ஹயூரிச் 12 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 5 விக்கெட்டுக்களையும் ஜோன்சன் 3 விக்கெட்டுக்களையும் பொல்லிங்கர் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது. இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு திருப்புமுனை அமைத்த மைக்கல் ஹசி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.


**வெளிநாட்டில் ஒலிபரப்பாகும் வானொலிக்கு அறிவிப்பாளர்கள்-ஒலிபரப்பாளர்கள்-நிகழ்ச்சித்தயாரிப்பாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தேவை.........**

01)உயர்தரம் அல்லது சாதாரணம் கல்விப் பொதுத்தராதரத்தில் சித்தியடைந்து இருக்கவேண்டும்.
02)தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமைச்சித்தி எதிர்பார்க்கப்படும்,
03)மொழிவளமும் குரல்வளமும் இருக்கவேண்டும்,
04)இலக்கியம்,சமயம்,சினிமா,விளையாட்டு,பொது அறிவு என்பவற்றில் ஆளுமையுடையவராக இருக்கவேண்டும்,
05)இருபது வயதுக்கு மேற்பட்டவராகவும், நாற்பது வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும்,
06)முன் அனுபவம்தேவையில்லை,ஆண்-பெண் இருபாலாரும்விண்ணப்பிக்கலாம்,
07)விண்ணப்பமுடிவு திகதி 15.01.2010 இரவு 12.00மணி,
08)கணணி அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,
09)மின்னஞ்சல் மூலம் மட்டுமே விண்ணப்பிக்கலாம்,
10)முகவரி..தமிழ் வானொலி அற்வைமெயில்டொட்கொம்.
11)பகுதி நேரம்-முழு நேரம்-இரண்டுக்குமான உங்களின் முழு விபரங்களையும் விண்ணப்பங்களை நீங்களே தயாரித்து அனுப்பவேண்டும்.
12)ஊதியம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**tamilvanoli@ymail.com** (313)



CARITAS **கரித்தாஸ் - கியூடெக்** HUDEC

**மணற்காடு, அல்லைப்பிட்டி பிரதேச நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான கட்டிடப் பொருட்களுக்குரிய கூறுவிலை கோரல்**

**பொருட்கள்**

01. கண்டகல், சல்லி
02. கூரை மரங்கள்
03. புதிய தட்டை ஓடுகள், முகட்டோடுகள்
04. கதவு நிலைகள், கதவுகள்
05. யன்னல் நிலைகள், யன்னல்கள்

**குறிப்பு:-**

- வழங்குனர் எமது நிறுவனத்தில் வழங்குனராக பதிவு செய்ய வேண்டும்.
- கூறுவிலை விண்ணப்பப்படிவம் 07.01.2010-11.01.2010 வரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 15.01.2010ற்கு முன்னர் நேரடியாக கையளிப்பதன் மூலமோ அல்லது பதிவுத் தபாலின் மூலமாகவோ கீழ்க் குறிப்பிடப்படும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

*அருட்பணி கி.யோ.ஜெயக்குமார்*
*இயக்குனர்*
*கரித்தாஸ்-கியூடெக்*
*யாழ்ப்பாணம்.*

*இயக்குனர்*
*கரித்தாஸ்-கியூடெக்*
*த.பெ.எண்: 159*
*யாழ்ப்பாணம்.*

(C-4151)


# மருத்துவபீட மாணவன் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

லொறி-மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணம் மருத்துவ பீட மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பி.ப 12.30 மணியளவில் கோப்பாயில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் கதிரேசு தம்பி ரஞ்சன் (வயது-21) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ச-7,30)


**வீடு வாடகைக்கு**

**தெஹிவளையில் இரண்டு அறைகளுடன்சகலவசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.**

**1-5 நாட்களுக்கு 1900/= படியும், 6-10 நாட்களுக்கு 1700/=படியும்,10க்கு மேற்பட்ட நாட்களுக்கு 1500/= படியும் அறவிடப்படும்.**

(312) தொடர்புக்கு:-077 0641256

# இன்று ஒரு தகவல்

## ஒரு சிறந்த ஓவியம்

ஒரு ஊரில் ஒரு குரு இருந்தார்.

அவரைத்தேடி ஒரு மன்னர் வந்தார். வந்தவர் ஜப்பான் மன்னர்.

தோட்டக்கலையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக வந்தார்.

எப்படித் தோட்டம் அமைப்பது? என்பதைப் பற்றி அந்தக் குரு விபரமாகச் சொல்லிக் கொடுத்தார்.

ஒரு நாள், இரண்டு நாட்கள் அல்ல மூன்று வருடங்கள் கற்றுக் கொடுத்தார். அதன் பின் ''நான் கற்றுக் கொடுத்து விட்டேன். இனிமேல் நீங்கள் போகலாம். போய்த் தோட்டம் அமைக்கலாம். அதுதான் உங்களுக்குப் பரீட்சை. அமைத்த பின் சொல்லுங்கள். வந்து பார்க்கிறேன். நீங்கள் இங்கே என்னவெல்லாம் கற்றுக் கொண்டீர்களோ அதையெல்லாம் அங்கே செயல்முறையில் செய்து காட்டுங்கள்'' என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

மன்னர் போனார். அரண்மனைக்குப் பக்கத்தில் ஒரு பெரிய தோட்டம் அமைத்தார்.

அழகான மரங்களையும் செடிகளையும் உருவாக்கினார்.

கிட்டத்தட்ட ஆயிரம் தோட்டக்காரர்களைப் பயன்படுத்தி மூன்று வருடங்கள் முயற்சிசெய்து அந்த அழகான தோட்டத்தை அமைத்தார். குருவிடமிருந்து செய்தி வந்தது.

''தோட்டத்தை நாளைக்கு வந்து பார்க்கிறேன்'' என்று மன்னர் சுறுசுறுப்பானார்.

முதல் நாளே தோட்டத்தைத் துப்புரவாக்கினார்.

எல்லோருக்கும் தோட்டத்தை ஒழுங்கு படுத்தும் வேலை.

எல்லாம் அந்தந்த இடத்தில் ஒழுங்காக இருக்கிறதா என்று சரி பார்த்தார்கள்.

ஒரு தவறும் இல்லாத வகையில் ஒழுங்குபடுத்தினார்கள்.

அடுத்த நாள் குரு வந்து தோட்டத்தைப் பார்த்தார்.

அவருக்குக் கோபம் வந்து விட்டது.

மன்னருக்கு ஆச்சரியம்!

மெதுவாக குருவிடம் போய் "எல்லாம் சரியாகத் தானே இருக்கிறது?" என்றார்.

''எல்லாம் சரிதான். ஆனாலும் எங்கே அந்தப் பொன்நிறக் காற்று? ''என்றார்.

''உதிர்ந்த இலைகள்... பொன் மஞ்சள் நிற இலைகள்...நான் பார்க்க முடியவில்லை!'' என்றார்.

அது இல்லாமல் இந்தத்தோட்டம் உயிரோட்டமுள்ளதாக இல்லையே... பாடல் இல்லை... ஆடல் இல்லை... அதெல்லாம் இல்லாமல் இந்தத் தோட்டம் செயற்கையாகத் தெரிகிறதே என்றார். மன்னர் இப்போது தான் யோசித்தார்.

கீழே காய்ந்து போன இலைகள் மட்டுமல்ல. மரத்திலிருந்து காய்ந்து போன இலைகளையும் அப்புறப்படுத்தி சுத்தமாக வைத்திருந்தார்.

இறப்பும் வாழ்வின் ஒருபகுதிதான்.

மரணம் என்பது வாழ்க்கைக்கு எதிரானது அல்ல.

அதை நிரப்பும் ஒரு பகுதிதான் அது.

மரணம் இல்லையேல் வாழ்க்கையே இல்லை.

இப்பொழுது அந்தத் தோட்டம் அழகாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் அது ஒரு ஓவியம் போல் உயிரில்லாமல் இருக்கிறது.

குரு ஒரு வாளியைக் கையில் எடுத்துக் கொண்டார்.

தோட்டத்தை விட்டு வெளியே போனார். ஏற்கனவே வீசியெறிந்த சருகுகளையெல்லாம் அள்ளிக் கொண்டு வந்தார்.

உள்ளே எல்லா இடங்களிலும் வீசினார்.

உடனே காற்று அந்தக்காய்ந்த சருகுகளையும் பழுத்த இலைகளையும் அசைக்க ஆரம்பித்தது.

இப்பொழுது அங்கே சலசல சப்தம்... சங்கீதம்... இலைகளின் நடனம்...

ஓவியம் போல் இருந்த அந்தத் தோட்டத்துக்கு இப்பொழுது உயிர் வந்து விட்டது.

இதுதான் அந்தப் "பொன்னான காற்று" என்றார் குரு. மன்னருக்குப் புரிந்தது.

என்னிடம் ஒருத்தர் தோட்டம் அமைக்க வேண்டும் என்று யோசனை கேட்டு வந்தார்.

எல்லாம் சொல்லிக் கொடுத்தேன்.

''செடிகள் செழிப்பாக வளர வேண்டுமென்றால் வேர் காயாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தினமும் தண்ணீர் விடுங்கள்.'' என்று சொல்லி அனுப்பினேன்.

ஒருமாதம் கழித்து அவருடைய தோட்டத்தைப் பார்க்கப் போனேன்.

போய்ப்பார்த்தால் எல்லாச் செடியும் வாடிக் கிடந்தது.

"என்னங்க... இப்படி?" என்றேன்.

"நீங்கள் சொன்னபடி தான் செய்தேன்" என்றார்.

"எப்படி? "என்றேன்.

"தினமும் ஒரு தடவை எல்லா செடியையும் ஒவ்வொன்றாகப் பிடுங்கி... வேர் காயாமல் இருக்கிறதா என்று பார்த்து விட்டு அதன் பின் தண்ணீர் பாய்ச்சினேன்"என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# இனந்தெரியாதோர் விடுத்த உத்தரவினால் குழப்பமடைந்த சிலாபம் தமிழ் மக்கள்

(கொழும்பு)

இனந்தெரியாத நபர்களினால் விடுக்கப்பட்ட உத்தரவினால் சிலாபம் பிரதேச தமிழ் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு முன்னதாக தமிழ் மக்கள் அனைவரும் சிலாபம் நகரை விட்டு வெளியேற வேண்டுமென காவல்துறை அதிகாரிகள் எனதம்மை அடையாளப்படுத்திக் கொண்ட இனந்தெரியாத நபர்கள் உத்தரவிட்டதனால் இந்த குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகக் குறித்த நபர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் சிலாபம் நகரைச் சேர்ந்த சில தமிழ் வர்த்தகர்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் ஆறு மணிக்கு முன்னதாகவே நகரை விட்டு வெளியேறிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் காவல்துறையினர் இவ்வாறான ஓர் உத்தரவை பிறப்பிக்கவில்லை எனவும் இதனை யார் மேற்கொண்டார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளதாகவும் சிலாபம் பிரதேச காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக முதலில் தமிழர்களை வெளியேறுமாறு காவல்துறையினர் கோரியதாகவும் பின்னர் அது அரசியல் பிரச்சினையாக மாறும் என்பதனால் அதன்னை வாபஸ் பெற்றுக்கொண்டதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு சிலாபம் பிரதேசத்தில் கடுமையான பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## மேலதிக பொறுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் பொது நிர்வாகத்திற்கான பிரதிப் பிரதம செயலாளர் இராசநாயகத்திற்கு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிராந்திய ஆணையாளர்களுக்குரிய பொறுப்புக்கள் வடக்கின் ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளது. முன்பு கிளிநொச்சி அரச அதிபராக பணியாற்றிய இராசநாயகம் கடந்த சில மாதங்களாக மக்களை மீள் குடியேற்றும் பணியிலும் முழுமையாக ஈடுபட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் சட்டமாணிக்கற்கை நெறிக்கான உதவி விரிவுரையாளர் மற்றும் துறைசார் நிபுணத்துவ ஆலோசகர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சட்டமாணி பட்டத்தை பெற்றவராக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக விண்ணப்பப் படிவத்தை இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கும்படி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6-30)

## சிவத்தமிழ்ச் செல்வியின் 85வது பிறந்த நாள் அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்த நாள் அறநிதியத்தினால் நடத்தப்படும் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாளும் அறக்கொடை விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்ன பூரணி மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிவத்தமிழ்ச்செல்வி விருதுபெறும் சான்றோர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

இதில் திருகோணமலையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர்களான பொ.கந்தையா (சிவத்தமிழ் பணி செய்த பெருமகன்), திருமதி பராசக்தி நவரத்தினம் (சிவயோக நிலையத்தை உருவாக்கி சைவத் தமிழ் பணி செய்த அம்மையார்) ஆகியோரும் மாவிட்டபுரம் நாதஸ்வர வித்துவான் எஸ்.ஆர் ஞானசுந்தரம் (சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைப்பணி செய்த மூத்த கலைஞர்),தெல்லிப்பழை இளைப்பாறிய முதன்மை ஆசிரியர் ச.விநாயகரத்தினம். (கீரிமலை சிவநெறிக் கழகத்தின் ஸ்தாபகர் சிவத்தமிழ் பணி செய்த நல்லாசிரியர் ) ஆகியோர் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (6-4)

## இராசி பலன்

07-01-2010
(மார்கழி 23 வியாழக்கிழமை)
சப்தமி முற்பகல் 11.05 மணிவரை
அத்தம் முன்னிரவு 10.85 மணிவரை
இராகுகாலம் 2.02-3.32 மணிவரை
சுபநேரம் 8.02- 9.32 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கை கூடும், ஆரோக்கிய நிலை, சத்துரு ஜெயம், மன மகிழ்ச்சி |
| இடபம் | கௌரவக் குறைவு, காரிய இடையூறு, பணக்குறைவு, பூர்வ புண்ணிய கருமம் |
| மிதுனம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம் |
| கடகம் | வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம் |
| சிங்கம் | கோபப்படுதல், தொழில் மந்த நிலை, முயற்சி தாமதம், தன விரயம் |
| கன்னி | பெரியோர் ஆசி, ஆழ்ந்த சிந்தனை, சயனசுகம், முயற்சி கைகூடும் |
| துலாம் | பிதாசிந்தை, உணர்ச்சி வசப்படல், பணவிரயம், தொழில் நன்மை |
| விருச்சிகம் | தொழில் சிந்தை, கலந்துரையாடல், மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம் |
| தனுசு | சுபநிகழ்வு, இனிய தகவல், தொழில் முன்னேற்றம், எடுத்த காரியம் கைகூடும் |
| மகரம் | தேவையற்ற பயம், அஜீரணக் கோளாறு, தனவிரயம், புதிய திட்டமிடல் |
| கும்பம் | வீண்பகை, முயற்சி தாமதம், தொழில் நன்மை, போசனசுகம் |
| மீனம் | குடும்பசுகம், காரிய நன்மை, தன்னம்பிக்கை, தனலாபம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 280 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 320 | 250 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 120 | 140 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 160 | 180 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 200 | 220 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 160 | 180 | 150 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | 200 | 280 | 160 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 120 | 130 | 120 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 35 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# சூரிய மண்டலத்துக்கு வெளியே 5 புதிய கிரகங்கள் கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் கெப்ளர் தொலைக்காட்டி சூரிய மண்டலத்துக்கு வெளியே 5 புதிய கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளது. இந்த தொலைக்காட்டி டெல்டா -2 றொக்கெட் மூலம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. இதில் மிகப் பெரிய கமரா பொருத்தப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட நட்சத்திரங்களை கண்காணித்து வருகிறது.

இந்த 5 புதிய கிரகங்களும் நெப்டியூனை விட பெரியவை. இந்த கிரகங்களுக்கு 4பி,5பி,6பி,7பி,8பி என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த 5 கிரகங்களும் பூமியை விட 4 மடங்கு பெரியவை ஆகும். அவை சூரியனுக்கு நெருக்கமாக உள்ளன. அவை 3.2 நாட்கள் முதல் 4.9 நாட்களுக்கு ஒருமுறை தங்களைத் தானே சுற்றி வருகின்றன. சூரியனை விட இந்த 5 கிரகங்களும் அதிக வெப்பம் மிகுந்தவை. இந்த கிரகங்களில் 1200 முதல் 1650 செண்டி கிரேடு வரை வெப்பம் இருக்கிறது. இந்த 5 கிரகங்களும் அதிக பிரகாசமானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# அமெரிக்காவில் 13 நாட்டினரிடம் சோதனை நடவடிக்கை தீவிரம்

(வோஷிங்டன்)

கிறிஸ்துமஸ் தினத்தில் ஓமனில் இருந்து அமெரிக்காவின் டெட்ராய்ட் வந்த விமானத்தை நடுவானில் வெடிக்க வைத்து தகர்க்க முயற்சி நடந்தது. சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனின் அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய நைஜீரிய இளைஞரின் சதித் திட்டம் முறியடிக்கப்பட்டது தெரிந்ததே.

இதையடுத்து, விமான நிலையங்களில் பாதுகாப்புச் சோதனைகளை மேலும் கடுமையாக்க அமெரிக்க பாதுகாப்பு துறையினருக்கு அதிபர் பராக் ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, அனைத்து சர்வதேச விமான நிறுவனங்களுடன் பயணிகள் சோதனையை பல மடங்கு உயர்த்தின.

பயணிகளை முழு உடல் சோதனை செய்வதுடன், அவர்களது உடைகள் அனைத்தும் பரிசோதனை செய்யப்பட்ட பிறகே விமானத்துக்குள் அனுமதிக்கப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், பாகிஸ்தான் உட்பட 13 நாடுகளில் இருந்து அமெரிக்கா வரும் பயணிகளிடம் 3 அடுக்கு பாதுகாப்பு சோதனைகள் நடத்தும் முறை நேற்று முன்தினம் அமுலுக்கு வந்தது.

அதன்படி, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, ஈராக், லெபனான், லிபியா, நைஜீரியா, சவுதிஅரேபியா, சோமாலியா, ஏமன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களிடம் சோதனை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதத்தை வளர்க்கும் நாடுகள் என்று அமெரிக்காவால் பட்டியலிடப்பட்டு உள்ள கியூபா, ஈரான், சூடான், சிரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகளிடம் மிகக் கடுமையான பாதுகாப்பு சோதனைகள் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது. (2-6)

# வாழைப்பழப் பெட்டிகளினூடாக கொக்கேய்ன் போதைப்பொருள் கடத்தல்

## ஸ்பெயினில் சம்பவம்

ஸ்பெய்னில் வாழைப்பழ பெட்டிகளின் ஊடாக கொக்கேய்ன் போதைப் பொருள் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பெய்னின் பல்பொருள் அங்காடிகளுக்கு சூட்சுமமான முறையில் வாழைப்பழ பெட்டிகளின் ஊடாக போதைப் பொருள் கடத்தப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அதற்குள் மிகவும் நுட்பமான முறையில் கொக்கேய்ன் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக அந் நாட்டு காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சில மில்லியன் யூரோ பெறுமதியான கொக்கேய்ன் போதைப் பொருட்களை காவல் துறையினர் மீட்டுள்ளனர் எனவும் பல்வேறு பொருட்களின் ஊடாக கொக்கேய்ன் போதைப் பொருட்களை கடத்தல்காரர்கள் கடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# வெள்ளி, செவ்வாய் கிரகங்களுக்கு செயற்கைக் கோள்கள்

## அமெரிக்கா அனுப்புகிறது

செவ்வாய், வெள்ளி கிரகங்களுக்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவன மான "நாசா" செயற்கை கோள்களை அனுப்புகிறது என்று அமெரிக்க விஞ்ஞானி ஜோன் சி.மாதர் கூறியுள்ளார்.

சென்னை எஸ்.ஆர்.எம்.பல்கலைக் கழகத்தில் வெள்ளிவிழா சொற்பொழிவு நேற்று நடந்தது. இதில் நாசா விஞ்ஞானி ஜோன் சி.மாதர் கலந்துகொண்டு உரையாற்றினார். பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

கோள்கள் குறித்து இரசாயன, புவியியல் ரீதியாக ஆய்வு நடத்துவதற்காக செவ்வாய், வெள்ளி கிரகங்களுக்கு நாசா செயற்கை கோள்களை அனுப்பவுள்ளது. முதலில் செவ்வாய்க் கிரகத்திற்கு 2011 ஆம்ஆண்டு செயற்கைக் கோள் அனுப்பப்படும். தற்போதைய ரோவர்ஸ் செயற்கைக் கோள் திட்டத்தை விட இது மிகவும் பிரமாண்டமான திட்டம் ஆகும். செவ்வாய் கிரகத்தில் அதிநவீன ஆய்வகங்கள் அமைத்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றார்.

அத்தோடு நாசா ஆய்வு மையம் ஏற்கனவே சந்திரா, ஹப்பிள் உட்பட 50 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியிருக்கிறது. ஏற்கனவே புதன்கிரகத்தைச் சுற்றி அமெரிக்காவின் செயற்கைக்கோள் ஒன்று ஆய்வு செய்து கொண்டிருப்பது அனைவருக்கும் தெரியும். செவ்வாய்க்கிரகத்தை அடுத்து வெள்ளிக்கிரகத்திற்கு செயற்கைக் கோள் அனுப்பப்படும். கிரகங்களைப் பொறுத்தவரையில் வியாழன் கிரகம் தான் விஞ்ஞானிகளால் அதிகம் விரும்பப்படும் கிரகம் ஆகும். அங்கு அடிப்படை அறிவியல் ஆய்வுக்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. வியாழன் கிரகத்தில் தண்ணீர், பனிக்கட்டி இருப்பதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. இதுபற்றிய ஆய்வுகளை இப்போதுதான் தொடங்கியிருக்கிறோம் எனக் கூறியுள்ளார். (2-6)

# அவுஸ்திரேலியாவில் தொடரும் இந்தியர்கள் கொலைகள்

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் ஏராளமான இந்தியர்கள் படித்தும், பணியாற்றியும் வருகிறார்கள். அவர்கள் மீது இன வெறியுடன் அடிக்கடி தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இதன் உச்சக்கட்டமாக கடந்த சனிக்கிழமை பஞ்சாபைச் சேர்ந்த நிதின் கார்க் (வயது 25) என்ற இந்திய வாலிபர் அவுஸ்திரேலியாவில் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். அவுஸ்திரேலியாவில் இந்தியர் ஒருவர் கொல்லப்படுவது இதுவே முதல்முறை ஆகும். இந்நிலையில் தற்போது அவுஸ்திரேலியாவில் மேலும் ஒரு இந்தியர் கொல்லப்பட்டுள்ளார். நியூசவுத் வேல்ஸ் மாகாணத்தில் வில்பிரிக்கி பகுதியில் சாலை ஓரத்தில் கடந்த வாரம் ஒரு உடல் கிடந்தது. பாதி எரிந்த நிலையில் அந்த உடல் காணப்பட்டது. அது 25 வயது மதிக்கத்தக்க வாலிபரின் உடல் ஆகும். அது ஒரு இந்தியர் என்று பொலிஸார் தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர்.

இருப்பினும் இந்த உடல் இன்னும் முறைப்படி அடையாளம் காணப்படவில்லை. அதற்காக இந்தியாவில் உள்ள அந்த வாலிபரின் குடும்பத்தினருடனும் இந்தியத் தூதரகத்துடனும் பொலிஸார் தொடர்பு கொண்டுள்ளனர்.

மேலும் இந்த வாலிபர் கொலை பற்றிய விசாரணையில் உள்ளூர் பொலிஸாருக்கு துப்பறியும் நிபுணர்களும் உதவி வருகிறார்கள்.

இந்தக் கொலைக்கு சம்பளத் தகராறே காரணம் என்று அவுஸ்திரேலிய தொழிலாளர் சங்கம் சந்தேகம் தெரிவித்துள்ளது. இது குறித்து அச் சங்கத்தைச் சேர்ந்த ஹாரி கோரிங் என்பவர் கூறியதாவது,

ஒப்பந்தத் தொழிலாளர்களாக அழைத்து வரப்படும் இந்தியர்களை ஒப்பந்தகாரர்கள் ஏமாற்றி விடுகிறார்கள். கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அளித்துவிட்டு மிகக் குறைவான சம்பளம் அளிக்கிறார்கள்.

இதனால் உரிய சம்பளத்தைப் பெற அவர்களுடன் இந்தியர் கள் மோதும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதுபோன்ற தகராறுகளை நாங்கள் வாரந் தோறும் கேள்விப்படுகிறோம். சம்பளப் பணத்தை திருடுவதாலும் தகராறு நடக்கிறது.

இந்திய வாலிபர் இந்த காரணங்களால் தான் கொல்லப்பட்டதாக நான் கூறவில்லை. ஆனால் இந்தியர் விவகாரங்களில் இது போன்ற சம்பவங்கள் நடப்பதாக சுட்டிக்காட்டுகிறேன் என்று கூறியுள்ளார். (2-6)

# இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் ஏற்படுத்த தீவிரவாதிகள் சதி முயற்சியிலீடுபட்டுள்ளார்கள்

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் இருந்து தலிபான் தீவிரவாதிகளை சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா இராணுவம் விரட்டியடித்தது. இதனால் பாகிஸ்தானின் வடக்கு எல்லை மலைக் காடுகளில் தலிபான் தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக தலிபான்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகிறது. இது தலிபான்களுக்கு பெரும் உயிரிழப்பையும் பொருள் சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளது.




இதில் இருந்து தப்பிக்க பாகிஸ்தானின் கவனத்தை திசை திருப்ப தலிபான் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக இந்தியாவில் அடுத்தடுத்து மிகப்பெரிய நாச வேலைகளில் ஈடுபட தலிபான்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

நாச வேலை அதிகமானால் பாகிஸ்தான் மீது இந்தியா கோபப்படும். இந்தியா , பாகிஸ்தான் இடையே போர் மூளும் ஒரு சூழ் நிலையை உருவாகும்.

இதையடுத்து வடக்கில் உள்ள இராணுவத்தை மீளப் பெற்று இந்திய எல்லை முழுவதும் பாகிஸ்தான் நிறுத்தும். இதன்மூலம் தங்கள் மீதான தாக்குதல்கள் தானாக குறைந்துவிடும் என்று தலிபான்கள் நினைக்கிறார்கள். எனவே இந்திய பாதுகாப்புப் படையினர் உஷாராக இருக்கவேண்டும் என்று அமெரிக்க உளவுத்துறை எச்சரித்துள்ளதாகத் தெரிகி றது. (2-6)

# ருமேனியாவில் பனிக்கட்டி ஹோட்டல்


ருமேனியாவில் பாகராஸ் மலையில் பனிக்கட்டி ஹோட்டல் உள்ளது. இந்த ஆடம்பர ஹோட்டலில் பனிக்கட்டி படுக்கையில் தான் ஹோட்டல் விருந்தினர் படுத்து தூங்க வேண்டும். உறைபனியாலான தட்டுக்களில் தான் சாப்பிட வேண்டும். ஹோட்டலே இராட்சத பனிப்பாறைகளால் கட்டப்பட்டது ஆகும்.

இந்த ஹோட்டலில் தங்கி இருப்பவர்கள் மிருக முடிகளைக் கொண்டு தைக்கப்பட்ட கம்பளி துணிகளையும் தெர்மல் துணிகளையும் அணிந்து கொண்டு தான் இருக்க முடியும். இங்கு எல்லாமே உறை பனியால் ஆனவை தான். இந்தக் ஹோட்டலில் 300 க்கும் மேற்பட்ட அறைகள் உள்ளன.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இந்த ஹோட்டலில் தங்குவதற்கு அறைகள் பதிவு செய்திருக்கிறார்கள். (2-6)

# கொங்கோவில் குமுறும் எரிமலை அரிய மனிதக் குரங்குகள் அழியும் அபாயம்


கொங்கோ ஜனநாயக குடியரசிலுள்ள எரிமலையொன்று குமுறி புகையையும் நெருப்புக் குழம்பையும் வெளித்தள்ள ஆரம்பித்ததையடுத்து அந் நாட்டிலுள்ள அரிய மனிதக் குரங்குகள் அழியும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொமா நகரின் கிழக்கே25 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நயமுலாகிரா என்ற இந்த எரிமலை குமுறி விறுங்காதேசிய பூங்காவை சுற்றியுள்ள பகுதிகளில் நெருப்புக் குழம்பை கக்கி வருகிறது. மேற்படி பிரதேசத்தில் சுமார் 40 அரிய மனிதக் குரங்குகள் வாழ்கின்றன. 10, 033 அடி உயரமான நயமுலாகிரா என்ற இந்த எரிமலை 1982 ஆம் ஆண்டிலிருந்து 35க்கு மேற்பட்ட தடவைகள் குமுறியுள்ளது. (6)



# நாயக்கர் கலைப்பாணி


97

இரண்டாம் பிரகாரம் 116 மீற்றர் நீளமும் 94 மீற்றர் அகலமுங் கொண்ட சுற்றளவினை உடையதாகும். அதன் மதிற் சுவர்கள் 5.48 மீற்றர் உயரங் கொண்டவை. அதன் வடக்குப் பக்கத்திலே பாழடைந்த நிலையில் 32 தூண்கள் காணப்படுகின்றன. கோயிலின் மடப்பள்ளி இதன் தென்கிழக்கு மூலையில் அமைந்திருக்கின்றது. கங்கை, யமுனை, காயா, சூரியன், சந்திரன், பிரம்ம கத்திய


இராமேஸ்வரம்

விமோசனன் என்னுந் தீர்த்தக் கிணறுகள் வடக்குப் பகுதியில் உள்ளன. கிழக்குப் பகுதியிலே சங்க தீர்த்தம், சக்கர தீர்த்தம் என்னும் கிணறுகள் உள்ளன. இரண்டாம் பிரகாரம் விஜயநகர காலத்து திருப்பணியாகும். இராமேஸ்வரத்திலே மூன்றாம் பிரகாரத்தைச் சுற்றி மிகப் பெரிய திருச்சுற்று மாளிகை அமைந்திருக்கின்றது. இதனைப் போன்ற அளவுடைய வேறொரு அமைப்பு தமிழகத்தில் வேறெங்கும் காணப்படுவதில்லை. கோயிலைச் சுற்றி அமைந்துள்ள சுற்றுப் பாதையானது 17 அடியிலிருந்து 21 அடிவரை அகலமுடையதாகும். நில மட்டத்தில் இருந்து கூரை வரை அது 25 அடி உயரங்கொண்டதாகும். அதில் வரிசை வரிசையாகத் தூண்கள் அமைந்துள்ளன. கோயிலைச் சுற்றி அமைந்திருக்குந் திருச்சுற்றுமாளிகை முற்றிலும் கூரையினால் மூடப்பட்டுள்ளது. அது மிக உயரமான தோற்றங் கொண்டது. 3,000 அடி நீளமான திருச்சுற்றுப் பாதையில் அமைந்துள்ள தூண் ஒவ்வொன்றும் 5 அடி உயரமுள்ள அடித்தளத்தில் அமைந்துள்ளது. தூண்கள் சராசரியாகப் பன்னிரண்டு அடி உயரமானவை.

மூன்றாம் பிரகாரம் தெற்குப் பக்கத்திலே 207 மீற்றர் நீளமும் வடக்குப் பக்கத்திலே 195 மீற்றர் நீளமும் கொண்டுள்ளது. கிழக்குப் பக்கத்தில் அதன் நீளம் 130 மீற்றராகும். மேற்குப் பக்கம் 118 மீற்றர் நீளங் கொண்டது. அதில் எல்லாமாக 1,212 தூண்கள் உள்ளன. அது சொக்கட்டான் மண்டபம் என்றுஞ் சொல்லப்படும். சபாபதி கோயில், கந்தமாத


திருநெல்வேலிக் கோயில்

னேஸ்வரம், இராமலிங்கப் பிரதிஷ்டை, சேது மாதவர் கோயில் என்பனவும் அவற்றோடு சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட மூன்று கோயில்களுங் காணப்படுகின்றன. கல்யாண மண்டபம், அநுப்பு மண்டபம் என்னும் கட்டடங்களும் இதிலே காணப்படுகின்றன. அவை இரண்டும் சேதுபதிகள் காலத்துத் திருப்பணியாகும். பிற தலங்களிலுள்ள விஜயநகர நாயக்கர் காலத்து மண்டபங்களைக் காட்டிலும் இவை அளவிற் சிறியனவாகும். இராமேஸ்வரத்திலே மண்டபத்தூண்களிற் கடவுளர் படிமங்களும், ஆடல் மகளிர் படிமங்களும், விலங்குகளின் உருவங்களும் சிற்பங்களாக அமைந்துள்ளன. குதிரைகளின் மேலும் யானைகளின் மேலும் ஏறிச் செல்லும் வீரர் களதும் வேட்டைக்காரரதும் உருவங்கள் மிகுந்து காணப்படுகின்றன. தூண்களிலே பத்மாசனம், கருக்குப் பட்டை, பாதம், பத்ம மாலை, கண்டம், கலசம், விருத்தம், தடி, கண்டம், கும்பம், கண்டம், பத்மம், பலகை, வீரகண்டம், போதிகை என்ற வண்ணமாகப் பகுதிகள் அமைந்திருக்கும். சதுரவடிவமான தூண்கள் பொதுவாக மண்டபங்களினதும் பிரகாரங் களதும் சுமையைத் தாங்கி நிற்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. தூண் களிற் கருக்குப் பட்டை, பாதம் என்னும் பகுதிகளிற் சிற்பங்களும், அலங்கார வேலைப்பாடுகளும், மனிதரின் உருவங்களும் அமைந்திருக்கின்றன. தூண்கள் பிரமாண்ட மான அளவு கொண்டவை. கனதியான சிற்பங்களைத் தாங்கும் பல பாகங்கள் இணைக்கப் பெற்ற கோலத்தில் அமைந் தவை.


### கோபுரங்கள்

இராமேஸ்வரத்திலே நான்கு கோபுர வாயில்கள் உள்ளன. கிழக்கிலும் மேற்கிலும் கோபுரங்கள் அமைந் துள்ளன. வடக்கிலுந் தெற்கிலும் கோபுரங்களின் அதிஷ்டானங்கள் மட்டுமே அமைக்கப்பட் டுள்ளன. அங்குள்ள கோபுரங்கள் நாயக்கர் காலத் திருப் பணிகளாகும். கிழக்குக் கோபுரம் இரண்டாம் பிரகாரத்திற்கு முன்னால் அமைந்திருக் கின்றது. ஏழு தளங்களுடன் அமைந்துள்ள அக்கோபுரம் மிகுந்த வனப் புடனும் உறுதியுடனும் விளங்குகின்றது. அது பாண்டியர் காலத்து அதிஷ்டானம் ஒன்றிலே அமைந் திருக்கின்றது. அது கி.பி.1659 ஆம் தளவாய சேது பதியினால் அமைக்கப் பெற் றது என் பது ஓர் ஐதீகம். ஆயினும், சாசனக் குறிப்பின் அடிப்படையில் பதினோ ராம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இராமேஸ்வரத்திலே கோபுரம் ஒன்று காணப் பட்டதென்று பேராசிரியர் இராமன் கருதுகிறார். மேற்குக் கோபுரம் ஐந்து நிலை களைக் கொண்டது. உள்ளே அதன் பகுதிகள் சிதைவடையாத நிலையில் இருக் கின்றன. அதிலே மிக முக்கியத்துவம் வாய்ந்த சிற்பங் கள் நிறைந்து காணப்படுகின்றன. பூத கணங்கள், இடபங்கள், கிருஷ்ணர், இராதை, ருக்மணி, ரிஷி பத்தினியர், பிக்ஷா டனர் ஆகியோரின் உருவங்கள் இந்தக் கோபுரத்தை அலங்கரிக்கின்றன.

இராமேஸ்வரம் வெவ்வேறு காலங்களில் அமைக்கப்பெற்ற பல கோயில்களையும் கட்ட அமைப்புக்களையும் கொண்ட தலமாக விளங்குகின்றது. 10 ஆம் நூற்றாண்டு முதலாக 18 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியில் உருவாக்கப்பெற்ற கட்டடங்கள் அங்குள்ளன. மூன்றாம் பிரகாரத்திற்கு வெளியில் உள்ள கோயில்கள் சோழர்காலத்திற்குரியவை. கல்யாண மண்டபம், அநுப்பு மண்டபம் முதலானவை சேதுபதிகளின் காலத்தவை. ஏனையவை பெரும்பாலும் விஜய நகர நாயக்கர் காலங்களைச் சேர்ந்தவை. அங்குள்ள பிரதானமான கோவில்களும் அதிக வனப்பு மிக்கதான திருநடைமாளிகையும் திருமலை நாயக்கர், கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் காலங்களுக்குரியனவாக கருதப்படுகின்றன.

### திருநெல்வேலிக் கோயில்கள்

நாயக்கர் பாணியில் அமைந்த இரு பெருங் கோயில்கள் திருநெல்வேலியிலும் ஸ்ரீ வில்லிப்புத்தூரிலுங் காணப்படுகின்றன. திருநெல்வேலியில் அமைந்த கோயில் இரட்டைக் கோயில். அவற்றில் ஒன்று ஈஸ்வரமாக அமைந்தது. மற்றையது திருக்காமக் கோட்டமான அம்மன் கோயிலாகும். அவை இரண்டும் 760 அடி நீளமும் 550 அடி அகலமுங் கொண்ட நீள் சதுரவடிவமான முற்றத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு கோயில்களும் சம அளவிலான தளங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மூலஸ்தானத்திற்கு முன்னால் அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் என்பன அமைந் திருக்கின்றன. வெளிப்புறத்திலே ஒவ்வொரு பக்கத்திலும் பிரகாரச் சுவரின் நடுவிற் கோபுரம் அமைந்திருக்கின்றது. வரிசையான தூண்கள் அமைந்த மண்டபங்களும் ஆயிரங்கால் மண்டபமும் வெளிப்புறத்தில் அமைந் திருக்கின்றன. ஆயிரங்கால் மண்டபம் 520 அடி நீளமும் 63 அடி அகலமும் கொண்டது. அதிலே 10 வரிசைகளில் 1,000 தூண்கள் காணப்படுகின்றன. திருநெல்வேலிக் கோயி


இராமேஸ்வரக் கோபுரங்கள்

லைப் போன்ற அமைப்பு ஸ்ரீவில்லிப்புத் தூரிலே காணப்படுகின்றது. அது நில மட்டத்தில் இருந்து உச்சி வரை செங்கற் திருப்பணியாக அமைந்திருக்கின்றது. பூச்சுக்களுக்குச் சுண்ணாம்பைப் பயன்படுத்தியுள்ளனர். அதன் கோபுரம் 13 தளங்களுடன் உயரமாக எழுந்து நிற்கும் மண்டபத்தைப் போலத் தெரிகின்றது. அது 100 அடி உயரங் கொண்டதாகும். அதன் கூரை பௌத்த கோயில்களிலே காணப்படுவனவற்றை ஒத்திருக்கின்றது. நடுவிலே அது சூரியனைப் போன்ற தோற்றத்தில் அமைந்திருக்கின்றது. அதன் மூலைகள் குவிந்தும் மேற்புறம் வளைந்தும் அமைந்துள்ளன. தென்னிந்தி யக் கோபுரங்களிலே அமைப்பிலுந் தோற்றத்திலும் தனிமை பொருந்தியதாக அக் கோபுரம் விளங்குகின்றது.

நாயக்கர் காலக் கட்டடக்கலை வளர்ச்சியைப் பற்றிய இப்பகுதியில் சேர நாட்டுக் கோயில்கள் பற்றியுங் குறிப்பிடுவது அவசியமாகும். திருவாரூர் தியாகேசர் கோயிலும், தொண்டை மண்டலத்து வட ஆர்க்காடு மாவட்டத்து திருவண்ணாமலைக் கோயிலும் நாயக்கர் காலக் கட்டடங்களைக் கொண்டுள்ளன. திருவாரூர்க் கோயில் மிகவும் புராதனமானதாகும். தேவார காலத் திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அங்குள்ள கோயில் சிறப்புற்று விளங்கியது. அங்குள்ள கோயில் கற்றளியாக அமைக்கப்பட்டது. காலப்போக் கில் புதிய அமைப்புக்களைப் பெற்றுப் படிப்படியாகக் கோயில் அளவிலே பெரிதாக வளர்ச்சியடைந்தது. திருவா ரூரிலே தியாகேசருக்கும் வான் மீகேச ருக்கும் தனித்தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் கருவறைகள் ஏறக்குறைய 190 அடி நீளமும் 160 அடி அகலமுங் கொண்ட பிரகாரத்தினுள் அமைந் திருக்கின்றன. கட்டடங்கள் கிழக்கு நோக்கியவை. கிழக்குப் பக்கத்துச் சுவரின் நடுவிலே கோபுரவாசல் அமைந்திருக்கின்றது. அதன் மேல் அமைந்த கோபுரம் இரா கோபுரம்; அது பதினைந்தாம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்றதென்று சொல்லப்படுகின்றது. இரண்டாம் பிரகாரம் 400 அடி நீளமும் அகலமுங் கொண்டுள்ளது. அதன் கிழக்கிலும் மேற்கிலுங் கோபுரங்கள் அமைந்திருக்கின்றன. மூன்றாம் பிரகாரம் ஏறக்குறைய 960 அடி நீளமும் 730 அடி அகலமுங் கொண்டதாகக் காணப்படுகின்றது. அதன் கிழக்கு வாசலிலும் மேற்கு வாசலிலும் பிரமாண்டமான கோபுரங்கள் அமைந்திருக் கின்றன. மூன்றாம் பிரகாரத்தில் ஆயிரங்கால் மண்டபம் ஒன்று கட்டி முடிக்கப் பெறாத நிலைமையிற் காணப்படுகின்றது. வெளிப்பிரகாரத்தின் கிழக்குக் கோபுரம் வேலைப்பாட்டில் அதி சிறப்புமிக்க கோபுரங்களில் ஒன்றாகக் கருதப்படுகி ன்றது. அது பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே அமைக்கப்பட்டதென்று கொள்ளலாம். அக் கோபுரத்தில் கீழ்த்தளங் கள் மூன்றும் அலங்காரமான தோற்றத்துடன் அமைந்திருக் கின்றன. அவற்றிலே காணப்படும் அரைத் தூண்களும் சிற்ப வேலைப் பாடுகளும் அளவிலே பெரியனவாகவும் வனப்புடையனவாகவும் விளங்குகின்றன. அவற்றுக்கு மேலுள்ள தளங்கள் இரண்டில் மாடக்குழிகளும் கருமை நிறங் கொண்ட வடிவங்களும் அமைக்கப்பட் டுள்ளன.

திருவாரூரில் ஒன்றினுள் ஒன்றாக அமைந் திருக்கும் மூன்று பிரகாரங்களிலும் கோபுரங்கள் சிறப்பாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். திருவண்ணாமலைக் கோயிலும் அமைப்பில் அதனைப் போன்றதாகவே காணப்படுகின்றது. அதன் வெளிப் பிரகாரத்துக் கோயில்கள் நாயக்கர் காலத்திற் குரியவை.

பேராசிரியர் சி.பத்மநாதன்

நிறைவாக தஞ்சை இராஜராஜேஸ்வரமுடையார் கோயில் வளாகத்தில் அமைந்திருக்கும் சுப்பிரமணிய சுவாமி கோயிலைக் குறிப்பிடலாம். அது 120 அடி நீளமும் 35 அடி அகலமுங் கொண்ட கட்டடமாகும். அதிலே 55 அடி உயரமுடைய விமானங் காணப்படுகிறது. கலையழகிலே சோழரின் மகோன்னதமான ஆலயத்தின் இணையில்லா விமானத்தின் வனப்பிற்கு நிகரான வகையில் இக் கோயிலின் விமானத்தைப் பதினெட்டாம் நூற்றாண்டிலே தமிழகத்துக் கலைஞர்கள் உருவாக்கியுள்ளனர்.

(தொடரும்)

**"விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்" ஆய்வுத் தொடரில் நாளை கலாநிதி இராசு காளிதாசனின் "விஜயநகரக் காலச் சிற்பக்கலை" ஆய்வுக் கட்டுரை பிரசுரமாகும்.**

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 9 விதி எண் : 1

9,18,27 ஆகிய திகதி ஒன்றில் பிறந்தவராக இருப்பின் அவர் பிறந்த எண் 9 என்று அறிவோம்.

### உடலமைப்பு

பிறந்த எண் 9 விதி எண் 1 ஆகக் கொண்டு பிறந்தவர்கள் செவ்வாய் மற்றும் சூரியன் இருவரின் ஆதிக்கத்திற்குட்டவர்கள் . இவர்கள் நடுத்தர உயரமானவர்களாக கம்பீரத் தோற்றத்துடன் காணப்படுவர். இவர்கள் முகம் கலையாக இருக்கும்.இவர்கள் எப்போதும் சுத்தமான ஆடையை அணிந்து கவர்ச்சிகரமாகத் தோற்றமளிப்பர்.

### மன , குணவியல்பு

இவர்கள் தைரியமிக்கவர்கள். முரட்டுத்தனமானவர்களும் கூட.எந்த ஒரு காரியத்தையும் துணிச்சலுடன் செய்யக் கூடியவர்கள்.

ஆனால் இவர்கள் முன்பின் யோசியாமல் எதையும் செய்துவிடுவர். அதனால் சில தொல்லைகளை ஏற்க வேண்டிவரும். அதற்காக வருந்தக்கூடிய நிலையும் ஏற்படும்.

இவர்களிடம் பணம் இருந்துவிட்டால் போதும். கண்மூடித்தனமாகச் செலவு செய்துவிடுவர். கையில் பணம் இருந்தால் சந்தோஷ மிகுதியால் துள்ளிக் குதிப்பர்.ஆனால் பணமில்லையென்றால் இவர்கள் சோர்ந்துவிடுவர்.

இவர்களுக்கு நண்பர்களுக்கு குறைவிருக்காது. அவர்களுக்காகவும் பணம் செலவு செய்ய அஞ்சமாட்டார்கள்.

இவர்கள் சுதந்திரப் பிரியர்கள். பிறரின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருக்கக் கொஞ்சமும் சம்மதிக்கமாட்டார்கள். பேச்சளவில் கூட பிறருக்கு விட்டுக்கொடுக்கமாட்டார்கள்.

தம்மைவிட வல்லவர்களாக இருந்தாலும் சரி. வயதில் மூத்தவர்களாக இருந்தாலும் சரி தன்னை எதிர்பவர்களானால் எதிர்த்துப் போராடுவர். அதனால் உயிர் போவதாக இருந்தாலும் கவலைப்படமாட்டார்கள். இவர்கள் இயற்கைக் காட்சிகளை இரசிப்பதில் வல்லவர்களாக இருப்பர்.இவர்கள் அனுபவம் மிகுந்தவர்களாகவும் காணப்படுவர். எப்போதும் எதையாவது ஒன்றைப் பற்றி சிந்தித்த வண்ணம் இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்குக் குடும்ப வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். இவர்களுக்கு வாழ்க்கைத் துணை நல்ல முறையில் அமைந்தாலும் பெண்களின் கலகங்களால் குடும்பத்தில் கலக்கமும், போராட்டமும் மிகுந்திருக்கும். இவர்களின் முரட்டுத்தனத்தால் பிறரின் அதிருப்திக்கு உள்ளானவராக இருப்பர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் முரட்டுத்தனமுள்ளவர்களாகவும், அஞ்சா நெஞ்சம் கொண்டவர்களாகவும் இருப்பதால் இராணுவம், காவல்துறை, தீயணைப்புத் துறைகளில் பணி புரிபவர்களாக இருப்பர்.

இவர்கள் பொறியியல் மற்றும் மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருக்கக்கூடும். நெருப்பு, உலோகம் சம்பந்தப்பட்ட தொழில்களை நடத்துபவராகவோ, பணிபுரிபவர்களாகவோ, ஏஜெண்டுகளாகவோ இருக்கக்கூடும். இவர்கள் வீடு, நிலம் போன்றவற்றை வாங்கி விற்கும் தரகர்களாகவும் இருக்கக்கூடும்.

இவர்கள் அதிகமாக வருமானம் பெறக் கூடியவர்களாக இருப்பர். இருந்தாலும் செலவு செய்ய அஞ்சமாட்டார்கள், வீடு, சொத்து சேர்க்கவும் வாய்ப்புண்டு.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ணமிகுதியால் மூலம், பவுத்திரம், இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. நரம்புத்தளர்ச்சி, இடுப்புவலி, மூட்டு வலி போன்றனவும் ஏற்படக்கூடும். இவர்களுக்குச் சிறுநீரக பாதிப்பும் அதுசம்பந்தமான நோயும் கண் நோயும் ஏற்படும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் செவ்வாய், சூரியன், சுக்கிரன், புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 9,1,5,6 தொடர்பிலான யோகபலன் தரும் எண்களுக்குப் பெயர் அமைக்கலாம்.

இவர்களது நிறுவனங்களுக்கும் 9,1,5,6 தொடர்புடைய் எண்களின் பெயரே யோகம் அளிப்பவை.

இவர்களுக்கு 9,1,5,6 தொடர்புடைய எண்களும், திகதியும் யோகமானவை.

ஆனால் சந்திரன், கேது ஆதிக்கம் பெற்ற 2,7 அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமற்றவை.

## உடல் எண் : 9 விதி எண் : 2

### உடலமைப்பு

பிறந்த எண் 9 விதி எண் 2 ஆகக் கொண்டு பிறந்தவர்கள் செவ்வாய், சந்திரன் இருவரின் கூட்டு ஆதிக்கத்தில் பிறந்தவர் ஆவர். இவர்கள் நடுத்தர உயரமானவர்களாகக் கவர்ச்சியான தோற்றத்துடன் காணப்படுவர்.

### மன, குணவியல்பு

இவர்களின் மனம் ஒரு நிலையில் இருக்காது.அடிக்கடி சலனத்திற்கு உள்ளாகக் கூடியவர்களாக இருப்பர்.

இருந்தாலும் மனபலம் கொண்டவர்கள். எதையும் துணிச்சலுடன் செய்யக்கூடியவர்கள்.

தாம் நினைக்கின்ற கருத்து தவறானது என்றாலும் அதை வெளியிட அஞ்சமாட்டார்கள். அதற்கு எதிர்ப்பு நேரிட்டாலும் அதை மாற்றிக் கொள்ளமாட்டார்கள்.

பிடிவாதக் குணம் உள்ளவர்கள். தங்கள் போக்கை கொஞ்சமும் மாற்றிக்கொள்ளமாட்டார்கள். யார் எதைப் பேசினாலும் குறுக்கே கேள்வி கேட்பதிலும் வாதம் புரிவதிலும் வல்ல வர்களாக இருப்பர்.

எப்போதும் பிறருடன் கருத்து வேறுபாடு கொண்டவர்களாகவும் பிறரின் வெறுப்புக்கு ஆளாகக் கூடியவர்களாகவும் இருப்பர்.

இவர்கள் தைரியமுள்ளவர்களாகக் காணப்பட்டாலும் இடையிடையே மனக் குழப்பத்திற்கு ஆளாகக் கூடியவர்கள்களாக இருப்பர். தம் தவறுகளை வெளிப்படையாக ஒப்புக் கொள்ள மறுத்தாலும் தனக்குத் தானே தனிமையில் உணர்ந்து அதற்காக வேதனைப்படக் கூடியவர்களாக இருப்பர்.

இவர்களுக்கு நண்பர்கள் பலர் இருப்பர். அவர்களின் பாராட்டுதல் உற்சாகமூட்டுவதாக இருக்கும்.

பிறருக்கு உதவும் நல்ல மனம் கொண்டவர்களாகவும் இருப்பர். இவர்கள் சமயப் பற்று மிக்கவர்களாகவும், கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்குத் திருமணம் நடப்பது கடினம். அப்படி நடந்தாலும் இவர்களின் குடும்ப வாழ்க்கை சோபீதமாக இருக்காது. வாழ்க்கையில் தீர்க்க முடியாத ஏதேனும் குறைபாடு இருக்கும். குழந்தை பாக்கியத்திலும், ஏதேனும் குறைபாடு இருக்கும்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் கலையார்வம் கொண்டவர்கள். அதிலும் எழுத்தாற்றல் பேச்சாற்றலில் வல்லவர்களாக இருப்பர். சட்டம், மருத்துவம், தத்துவம், கணிதம், பொறியியல் போன்ற துறை ஒன்றில் பிரசித்தி பெற்றிருப்பர். ஜோதிடர்களாகவும் இருக்கக்கூடும். இவர்கள் வண்டி, வாகனம், வியாபாரம் புரிபவர்களாகவோ, கமிஷன் ஏஜெண்டுகளாகவோ இருக்கக்கூடும்.விவசாயம், காய்கறி பயிரிடுதல் அல்லது அவை தொடர்பான பச்சை நிறப் பொருட்கள் விற்பனை செய்பவர்களாகவோ இருக்கக் கூடும்.இவர்கள் தம் தொழிலில் பெருமளவு சம்பாதித்துச் சொத்துச் சேர்க்கக் கூடும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்குச் சிறுநீரக சம்பந்தமான நோய்களும், நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், இருதயநோய் போன்றனவும் ஏற்படலாம். மூலம்,பவுத்திரம் போன்ற உஷ்ணம் மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட தொல்லைகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்கள் சுக்ரன், புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,5 தொடர்பிலானவற்றில் யோக பலன் அளிக்கவல்ல எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 6,5 தொடர்பிலான யோக எண்களுக்குப் பெயர் வைக்க இலாபம் பெருகும்.

இவர்களுக்கு 6,5 அது தொடர்பிலான எண்களும் திகதிகளும் யோக பலன்களை அளிப்பவை.

இவர்களுக்கு பாதகம் அளிக்கவல்ல எண்களும் திகதியும் குறிப்பிட்டுக் கூறுவதற்கில்லை. (தொடரும்)

---

# தமிழ் அரசியல் கைதிகளால் இலங்கை சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன

## கஜேந்திரன் எம்.பி



(கொழும்பு) கடந்தகாலத்தில் இலங்கையில் இராணுவத்தினராலும் துணை இராணுவக் குழுவினராலும் கடத்தப்பட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுவிக்க சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்தின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் அனைத்துப் பாகங்களிலும் உள்ள சிறைச்சாலைகள் தமிழ் அரசியல் கைதிகளால் நிரம்பி வழிகின்றது. வெறுமனே சந்தேகத்தினை மட்டும் அடிப்படையாக வைத்து கைது செய்யப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பலர் மீது குற்றப்பத்திரிகைகள் கூட தாக்கல் செய்யப்படவில்லை எனினும் அவர்கள் ஒன்றரை தசாப்தங்களை சிறைகளில் கழித்துள்ளனர்.

கடந்த கால ஆட்சியாளர்கள் அனைவரையும் விட மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முன்னெப்பொழுதும் இல்லாதளவுக்கு மிக அதிக எண்ணிக்கையான தமிழர்கள் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் கொடூர சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இக் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி காலத்திற்குக் காலம் உண்ணா விரதங்களையும் எதிர்ப்புப் போராட்டங்களையும் நடாத்தியுள்ளனர். எனினும் அவர்களது வாக்குறுதிகளை எந்த அரசாங்கமும் நிறைவேற்றவில்லை.

குறிப்பாக மஹிந்த அரசாங்கம் இவர்களது கோரிக்கைகள் எதனையும் நிறைவேற்றப்போவதில்லை.போராட்ட உணர்வுள்ளவர்கள் என்று சந்தேகிக்கும் அனைத்து தமிழ் இளைஞர்கள், யுவதிகளையும் அழித்தொழிக்க வேண்டும் என்பதே அவர்களின் ஒரே வெறியாக உள்ளது.

இந்நிலையில் சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி மீண்டும் உண்ணா விரதத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

---

# வடக்கு கிழக்கிலிருந்து வெளியேறிய சிங்கள மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு) வடக்கு கிழக்கிலிருந்து கடந்த காலங்களில் வெளியேறிய சிங்கள மக்களை மீள் குடியேற்ற வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

ஏறாவூர் பௌத்த விஹாரைக்கு அருகாமையில் இவ்வாறு இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் வாழ்ந்து வருவதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த சில மக்களும் இடம்பெயர்ந்துள்ளதாகவும், அவர்களையும் மீள்குடியேற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அலரி மாளிகையில் மதுபானப் பாவனையை தாம் நியாயப்படுத்தியதாக ஊடகங்களில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது எனவும் அவ்வாறு மதுபான பாவனையை தாம் ஒருபோதும் நியாயப் படுத்தவில்லை எனவும், ஊடகவிலாளர்கள் செய்தியை திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் செய்தி வெளியிடப்பட்ட ஊடகங்களை பிரதான ஊடகங்களாகக் கருத முடியாது எனவும், அவை சேறு பூசும் ஊடகங்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

---

# யாழில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் தென்பகுதி வியாபாரிகள்

(வடமராட்சி) யாழ்.மாவட்டத்தில் தென்பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளை பெருமளவில் மேற்கொண்டு வருகின்றனர். வாகனங்களில் சவர்க்கார வகைகள், சம்பு, பவுடர் மற்றும்பல வகையான பொருட்களை வீதியோரங்களில் எடுத்துச் சென்று விற்பனை செய்கின்றனர்.பத்து சன்லைட் சவர்க்காரம் நூறு ரூபாவாக விற்பனை செய்கின்றனர்.

அதேவேளை கட்டில்கள், அலுமாரி கள், மெத்தைகள் உட்பட வீட்டுத் தளபாடங்களையும் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். (6-10)

# எதிர்க்கட்சிகள் குரோத அரசியலில் ஈடுபடுகின்றன

## -ஜனாதிபதி-



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் குரோத அரசியலில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் தாம் அவர்களுக்கு குரோத மொழியில் பதிலளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிலாபம் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சி பிரசாரக் கூட்டங்களுக்கு திரளென மக்கள் படையெடுப்பதாகவும் எதிர்க்கட்சிகளின் கூட்டங்களுக்கு மக்கள் சமூகமளிப்பதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ள அவர் பௌத்தர்கள் என்ற ரீதியில் சகோதரத்துடன் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் எனவும் குரோத அரசியலை எதிர்க்கட்சிகள் கைவிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.


பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டிருக்காவிட்டால் அதற்கான பொறுப்பினை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இன்று யுத்தம் வெற்றியடைந்திருப்பதனால் அதற்கான உரிமையினை சகலரும் கோருகின்றனர்.

மேலும் உலகின் மிகக் கொடிய பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றாக தமிழீழ விடுதலைப்புலிகளை அமெரிக்காவும் பட்டியலிட்டிருக்கிறது.

அவ்வாறு பலம் பொருந்திய ஓர் பயங்கரவாத அமைப்பையே தமது அரசாங்கம் தோற்கடித்து மக்களுக்கு சுதந்திரத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# ஜனாதிபதியின் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ள முடியாதது

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைவது நிச்சயம் என்ற காரணத்தினால் அரசாங்கம் பீதியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தோல்வியை தாங்க முடியாது நாட்டின் ஜனநாயகத்தை ஆளும் கட்சியினர் சீர்குலைக்கக் கூடாது எனவும் அவ்வாறு தோல்வியைக் தாங்கிக் கொள்ள முடியாதவர்களுக்கு தமது சொந்த செலவில் விமான சீட்டுக்களை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரச ஊடகங்களில் ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக கடும் விமர்சனங்கள் வெளியிடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் எதிர்க்கட்சிகள் குரோத அரசியலில் ஈடுபட்டுவருவதாக ஜனாதிபதி குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றென அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்க்கட்சிக்கு ஆதரவளிக்கும் குழுக்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (2-6)

# நாட்டை அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்லவே ஜனாதிபதி மக்களின் ஆணையைக் கேட்கிறார்

## -அமைச்சர் பௌசி-

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு அதிக சேவைகள் புரிந்த ஒரே தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவேயாவார் என பெற்றோலியம் மற்றும் பெற்றோலியவள அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,



எமது ஜனாதிபதி அதிர்ஷ்டமுள்ளவர் . அதனால்தான் அவரது ஆட்சிக் காலத்தில் எண்ணெய் வளம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவரது தலைமையில் எமது நாடு ஆசியாவின் தனவந்த நாடாகத் திகழும் என்பதில் சந்தேகம் இல்லை.

நாட்டை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்லவே எமது ஜனாதிபதி மக்களின் ஆணையை மீண்டும் கேட்கிறார். ஆனால் எதிர்க்கட்சிகளோ பழிவாங்கும் மோசமான அரசியலில் ஈடுபட்டுள்ளனர். அதனால் நாடு முன்னேறாது . அதலபாதாளத்துக்கே செல்லும். இதனை நாட்டு மக்கள் இன்று நன்கு உணர்ந்துள்ளனர். எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே ஆதரிப்பர்.

எனவே இம் மாதம் 27 ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மிகவும் பலம் வாய்ந்த பொருளாதாரக் கொள்கையொன்று இந்த நாட்டில் அமுல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (2-6)

# கூட்டமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கே ஆதரவாம்

## மைத்திரிபால சிறிசேன கூறுகிறார்



(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதால் அக் கூட்டமைப்புக்குள் பெரும் பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

அதில் சம்பந்தன் தலைமையிலான குழுவினர் சரத் பொன்சேகாவை ஆதரித்தபோதும் அதன் ஏனைய பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்க உறுதியளித்துள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார். (2-6)




# அச்சுறுத்தல் காரணமாகவே ரி.எம்.வி.யினர் எதிர்க்கட்சியில் இணைய தயக்கம்-ஐ.தே.க

அச்சுறுத்தல் காரணமாகவே தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியைச் சேர்ந்த சிலர் எதிர்க்கட்சியில் இணைய தயக்கம் காட்டுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.


அதில் மாகாண சபைபிரதித்தலைவர் உள்ளிட்ட சில தமிழ் மக்கள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளிக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஆளும் கட்சியினால் விடுக்கப்பட்டு வரும் அச்சுறுத்தல்களினால் குறித்த உறுப்பினர்கள் ஆதரவளிப்பதற்கு பின்வாங்குவதாகவும் இவ்வாறு அச்சுறுத்தல்களின் காரணமாக பகிரங்கமாக அவர்களினால் எதிர்க்கட்சிக்கு ஆதரவளிக்க முடியாத நிலை உருவாகியுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பாதுகாப்புக் கருதி தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக குறித்த உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# தேர்தல் முடிபுகளை வெளியிட நவீன தொழில்நுட்பம்

## தேர்தல் ஆணையாளர் தகவல்



(கொழும்பு)

கடந்த தேர்தல் காலங்களை விட இம்முறை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உடனுக்குடன் முடிவுகளை அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளயர் தயானந்த திசாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படும் தினமான எதிர்வரும் 26ஆம் திகதி இரவு 8.30 மணிமுதல் தபால் மூல வாக்கெடுப்பு முடிவுகளை அறிவிக்கக்கூடியதாக இருக்கும். 26ஆம் திகதி வாக்களிப்பு அனைத்தையும் அன்றைய தினம் 8 மணிமுதல் கணக்கெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் காலநிலை மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது. அடை மழை பெய்யுமாயின் ஆகாய மார்க்கமாகவே வாக்குப் பெட்டிகளைக் கொழும்புக்குக் கொண்டு வருவோம். ஆதலால் சில வேளைகளில் முடிபுகள் தாமதமாகலாம். எவ்வாறெனினும் துரிதகதியில் முடிபுகளை அறிவிக்கவே நாம் எதிர்பார்க்கிறோம் என்று ஆணையாளர் மேலும் கூறினார். (2-6)

# மயந்த திஸாநாயக்க பொன்சேகாவுக்கு ஆதரவு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் மகனுமான மயந்த திஸாநாயக்க எதிர்க் கட்சி பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் தமது ஆதரவை வழங்கும் முகமாக மேடையில் ஏறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மயந்த திஸாநாயக்கவின் சகோதரரும் தற்போது மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் அமைச்சருமான நவின் திஸாநாயக்கவும் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கப் போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (2-6)

## தேர்தல் வெற்றிக்காக

# இந்திய ஜோதிடர்கள் கொடுத்த பந்துடன் மஹிந்த ராஜபக்ஸ

(கொழும்பு)

இலங்கைக்கு வந்துள்ள இந்திய ஜோதிடர்கள் கொடுத்த தங்கப்பந்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொது கூட்டங்களில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் நோக்கத்துடன் இந்தியா வில் இருந்து அழைத்துவரப்பட்ட ஜோதிடர் கள் மூன்று நாட்களாக அலரிமாளிகையில் பலவித பூஜைகளையும் யாகங்களையும் மேற்கொண்டதாக அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (2-6)

# அன்பால் எமையாண்ட



அம்மையார் ஏழைப் பெண் பிள்ளைகளின் கல்வி மேம் பாட்டை முற்படுத்தி " ஏழைக ளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்ற குறிக் கோளுடன் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை ஸ்தாபித்த பெருமைக் குரியவர்.

மேலும் கல்விப்பணியாற்ற தமது பிறந்த நாளாகிய ஜனவரி மாதம் 7 ஆம் திகதியில் ஆண்டு தோறும் கல்விப் பணிக்கு அறக் கொடை வழங்க அற நிதியச் சபையை உருவாக்கினார். சிவத் தமிழ் செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை 1988 ஆம் ஆண்டு உதய மானது.

இச் சபைக்கு தனித்துவமான உறுதி சாசனம் ஒன்று உண்டு.

அம்மையார் பெற்ற அனைத்துப் பட்டங் களிலும் "சிவதமிழ்செல்வி" என்ற காரை நகர் சிவன்கோவில் மணிவாசகர் சபை வழங்கிய பட்டமே மேலோங்கி நிற்கின்றது. 1998 ஆம் ஆண்டு சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் பணிகளைக் கௌரவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத் தை அம்மையாருக்கு வழங்கி பல்கலைக் கழகம் பெருமை பெற்றது. இப் பட்டமளிப்பு விழாவில் தமிழிலும், ஆங்கி லத்திலும் அறிமுக உரையை ஆற்றிய பெருமை பேரா சிரியர் அ.சண்முகதாஸ் அவர்களையே சாரும்.

திருவருளால் கிடைத்த சிவத்தமிழ் செல்வி அம்மா அவர்களின் அருமை பெருமைகள் எல்லாம் சர்வதேச சமூகத்தினால் இன்று சிவத்தமிழ்ச் செல்வி அம்மமையாரையே சார்ந்ததாகும்.

தேவஸ்தான வளர்ச்சிப் பணியில் திரு வீதிகளைப் புனிதத் தன்மை பேணும் சரியைத் தொண்டர்களையும், அன்னதானப் பணி களை ஆற்றும் தொண்டர்களின் பணிகள் இன்றும் போற்றுதற்குரியது. இவர்கள் அனைவரும் தாம் பெறுகின்ற வேதனத்தி லும் பார்க்க இவர்கள் ஆற்றுகின்ற பணிகள் மிகவம் மேலானதாக கணிக்கப்படுகின் றது. தொண்டர் தம் பெருமையை வாழ்த்திப் போற்றியவர் சிவத்தமிழ் செல்வி அம்மை யார்.

சிவத்தமிழ் செல்வி அம்மையார் திரு முறைகளை உச்சிமேல் வைத்து வணங்கி யவர், போற்றியவர். அம்மையார் பாடும் திருவாசகப் பாடல்களுக்கு உருகாதவர் இல்லை. இதனால் " திருவாசக கொண்டல்"

**கா.சிவபாலன்**

# சிவத்தமிழ் செல்வி அம்மையார்

19 ஆம் நூற்றாண்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும் பெருந்தொண்டாற் றியவர் தவப்பெருந்திரு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் - அவரைத் தொடர்ந்து 20 ஆம் நூற்றாண்டில் அரும்பெரும் தொண்டாற்றி யவர் வரிசையில் முக்கிய பங்கை வகிப்பவர் சிவத்தமிழ் செல்வி அம்மா "சிவத்தமிழ்ச் செல்வி " என்றால் சர்வதேச சமூகத்தினால் பெரும் இடத்தை வகிப்பவர். நாவலரும், சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவும் மார்கழி மாதத்தில் அவதரித்தவர்கள். நாவலர் கோபக்காரராக இருப்பினும் கருணையான உள்ளம்கொண்டவர். சிவத்தமிழ் செல்வி அவர்களும் கண்டிப்பானவராக இருப் பினும் கருணை வடிவமாக உள்ளவர். நாவலரின் தர்மம் கல்வி சம்பந்தமானது. அதேபோன்று சிவத்தமிழ் செல்வி அம்மை யாரின் தர்மமும் கல்வி சம்பந்தமானது. சமுதாய வெள்ளத்தில் இணைந்துள்ள

இதனால் இச்சபையின் யாப்பு விதிகள், செயற்பாட்டு நோக்கங்கள் என்பன வற்றை முதன் மைப்படுத்தி பிரபல சட்டத்தரணியான திரு.வி.எஸ். கணேசலிங்கம் ஐயா இல 3392 என்ற உறுதியில் வெளிப்படுத் தியுள்ளார்.

## இன்று அவரது 85ஆவது பிறந்ததினம்

இதன்பெறுபேறாக ஆண்டு தோறும் ஜனவரி மாதத்தில் வலிகாமம், தீவகம், வடம ராட்சி, தென்மராட்சி ஆகிய கல்வி வலயங் களைச் சார்ந்த ஆயிரக்கணக்கான மாண வர்களுக்கு கல்விக்குரிய அறக்கொடை வழங்கப்பட்டது. மேலும் நாம் நாட்டில் வாழ்ந்த வாழ்ந்து வருகின்ற சமயப்பணி யாளர்கள், இசைத்துறையினர், சான்றோர்கள் பலருக்கு அறக்கொடை வழங்கி சிறப்புக் கௌரவம் பெற்றிருக் கிறார்கள். சமய நூல்கள் பல பதிப்பிக்கப் பெற்று இருக்கின்றது.

பேசப்படுகின்றன - சிந்திக்கப்படுகின்றன.

அப்பர் சுவாமிகள் பஞ்சம் நீக்கும் பணி யையும், நாவலர் பெருமான் கஞ்சித்தொட்டித் தர்மத்தையும், சிவத்தமிழ் செல்வி அம்மை யார் அன்னதானப் பணியையும் மேற்கொண் டார்கள். துன்பங்கள் வருகின்ற போதும் சோர்ந்துவிடாதும் ''இருவினையொப்பு'' என்னும் நிலையில் நின்ற இன்பத்தையும், துன்பத்தையும் சரிவர நோக்கி செயற்பட்டவர் கள் தான் இந்த மூவர் பெருமக்களும் ஆவார்கள்.

தேவஸ்தானத்தில் பணிபுரியும் ஆலய அந்தண சிவாச்சாரியார்களையும், பணியா ளர்களையும் திருவீதிகளை சுத்திகரிக்கும் புனித பணியாளர்களையும் அன்போடும், பண்போடும் நெறிப்படுத்தி நடாத்திய பாங்கு

என்ற பட்டத்தை சிலாங்கூர் இலங்கை சைவ சங்கம் வழங்கி பெரும் பாராட்டைச் செய்தது. "திருமுறைச் செல்வம் ஓங்குக" என்று பிரார்த்தித்த அம்மையார் துர்க்கை அம்மன் கோவில் தென்கிழக்குத் திசையில் "திருமுறை மடம்" ஒன்றை ஸ்தாபித்தார். அத் திருமுறைமட முன்றலில் அம்மை யாரின் சிவபதப்பேறு குறித்து பாடல் ஒன்று வரை யப்பட்டுள்ளது.

*"ஆண்டு" சர்வதாரி அதில் ஆனிமாதமதில்*
*தூண்டு திதி பூர்வ துவாதசியம் - பூண்டபேர்*
*அன்பால் எமையாண்ட அன்னை தங்கம்*
*மாவென்பாள்*
*விண்பால் விரைந்த தினம்*

என ஈழத்துத் தமிழ் கவிஞர் சோ. பத்ம நாதன் அவர்கள் மிகவும் அழாகப் பாடி யுள்ளார்.

எங்களை எல்லாம் அன்பால் எமை யாண்ட சிவத்தமழ்ச் செல்வி அம்மை யாரின் 85 ஆம் பிறந்தநாளில் அவர்களது சைவ நீதியைச் சிந்திப்போமாக.

---

## "நீள நினைப்பதற்குரிய அன்னை எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி"

உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவி எங்கள் சிவத்தமிழ்ச் செல்வி
உயர்ந்த தோர் அறம் காத்த உத்தமி எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி
திலகமாய் விளங்கிய எம் தேசத்தின் திருவிளக்கு எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி
தேசம் போற்றி வாழ்த்திய தெய்வம் எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி
நிலவிய துயரம் தீர்த்த அறக்கொடை நாயகி எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி
நீள நினைப் பதற்குரிய அன்னை எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி
தளர்விலா சைவநெறி காத்த துர்க்கா துரந்தரி எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி
தமிழர் தேசத்தின் "தர்மத்தின் காவலர்" எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி

-மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

## வரமாய்ப் பேறானாய்

சிவமாய் முதலாய் உமையாய்த் தவமாய்,
செந்தமிழாய் சிவ நெறியாய் மகிழ்ந்தாய்,
தவமே சுகமாய் தங்க(ம்)மாய் பெரிதாய்
தெல்லியில் பணிந்தாய் திருப்பணி சுமந்தாய்

சுமந்தபணி வென்றாய், சூடிய நாமம் ஜெயித்தாய்
நனைந்த மனமுடையாய் நாவில் தெளிவுடையாய்
முனைந்த பணிவுடையாய் மேவிய பணிக்கொடையாய்
வனைந்த பெருங்கோயிலில் வரமாய்ப் பேறானாய்.

கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்

## தெய்வத் திருமகள் தங்க அம்மா !

தெல்லிநகர் தனிலமைந்த துர்க்கைத் தேவியவள்
திருக்கோவில் நிர்வகித்த தலைவியான தங்க அம்மா!
நல்லதமிழ் படையினிலே நானிலத்தோர் நலம்பெறவே
நூல்கள் பல நயந்தளித்த நூலாசிரியையான தங்க அம்மா!
வல்லதமிழ் வாய்மொழியால் வளர்சைவம் வளமுறவே
வேண்டும் பணி தனைச் செய்த சொற்பொழிவாளரான தங்க அம்மா!
அல்லலுற்ற அநாதைகட்கு அபயமாய் ஆதரவை
அளித்துநல் வாழ்வுதந்த தெய்வத்தாயான தங்க அம்மா!
முல்லைச் சிரிப்பெனவே முதியோர் வாழ்வில் நலம்
மலர்ந்திடவே முன்னின்ற மனிதநேயரான தங்கஅம்மா!
கல்வியதன் வளர்ச்சிக்கும் சுகநலப் பணியினுக்கும்
கைகொடுத்த சிறப்பு மிகு அறக்கொடையாளரான தங்கஅம்மா!
எல்லையிலா அருட்கடலாம் எம்பிராட்டி ஆலயத்தின்
அறப்பணியில் சமூகச் சேவையாளரான தங்க அம்மா!
தில்லை திருக்கூத்தன் திருப்பாதத் திருநிழலில்
தங்குகின்ற தங்க அம்மாவே! சாந்தி! சாந்தி!

நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்



தேசிய சேமிப்பு வங்கியின் வடமாகாண அஞ்சல் வங்கிக் கிளையினால் தரம் 05 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் வடமாகாண அஞ்சல் வங்கிக் கிளை முகாமையாளர் இ.இராஜாமகேந்திரசிங்கம், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் ஞானகாந்தன் ஆகியோர் உரையாற்று வதையும், நிகழ்வில் பரிசில்கள் பெற்ற மாணவர்கள், அதிபர்கள், வங்கி உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

# நாட்டை விட்டு வெளியேறும் அமைச்சர்களின் குடும்ப உறுப்பினர்கள்

## -லக்ஸ்மன் செனவிரட்ண-

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்களுக்கு முன்னதாக அமைச்சர்களின் குடும்ப உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதாக லக்ஸ்மன் செனவிரட்ன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தகைய அமைச்சர் ஒருவரின் புதல்வி நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகவும் மற்றுமொரு அமைச்சரின் மனைவி சில தினங்களில் நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டம் தொடர்பில் இன்றைய தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக தெரிகிறது. மேலும் பலர் நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல உத்தி தேசித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை டிசம்பர், ஜனவரி மாதங்களில் அனேகமான அமைச்சர்கள் விடுமுறையில் செல்வது வழமை எனவும் பல்வேறு நாடுகளில் அமைச்சர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் விடுமுறையைக் கழிப்பது வழமையானதெனவும் மற்றுமொரு செய்தி சுட்டிக்காட்டுகின்றது. (2-6)

# ஊடகவியலாளர் மாநாட்டிலிருந்து அகற்றப்பட்டார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)



கொழும்பில் நடைபெறவிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொள்ள சென்ற அனைத்துலக வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல்.பீரீஸ் அதில் கலந்து கொள்ள விடாது தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அரச தரப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி கடந்த வாரம் தேர்தல் இணைப்பு அலுவலகத்தில் நடைபெறவிருந்த ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கலந்துகொள்வோர் பட்டியலில் அமைச்சர் ஜி.எல் பிரீஸ் இன்பெயரும் சேர்க்கப்பட்டிருந்தது.

ஆனால் பின்னர் அது திடீரென நீக்கப்பட்டுவிட்டு எனினும் அது தொடர்பில் பிரிஸ் இற்கு அறிவிக்கவில்லை. காலை ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு சென்ற அமைச்சருக்கு அங்குவர தேவையில்லை என தொலைபேசியில் கூறப்பட்டது.

அதற்கான காரணத்தை அறியும் பொருட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர் டலஸ் அழகப்பெருமா, பசில் ராஜபக்ஷ ஆகியோரை பிரீஸ் தொடர்புகொள்ள முயன்ற போதும் யாரும் பதிலளிக்க வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இழந்ததற்கு பிரிஸ் தான் காரணம் என குற்றம் சுமத்திய பசில் ராஜபக்ஷவே ஊடகவியலாளர் மாநாட்டில் இருந்து பிரிஸ் இன் பெயரை அகற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-6)

# இருவருடம் அமைச்சராக இருந்த போது ஹக்கீம் வடபுல முஸ்லிம் பற்றி ஒன்றும் பேசவில்லை

## பசில் ராஜபக்ஸ

(கொழும்பு)

இரு வருடங்கள் அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் ஹக்கீம் வட மாகாண முஸ்லிம்களைப்பற்றி ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. எமது ஆட்சிக் காலத்திலேயே வடபுல முஸ்லிம்கள் தமது தாயக மண்ணுக்குச் சுதந்திரமாகச் செல்லக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அண்மையில் ஆலங்குடாவில் நடைபெற்ற அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மகாநாட்டில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனவரி மாத முற்பகுதியில் மன்னார் தீவை பெரும் நிலப்பரப்புடன் இணைக்கும் பாலம் திறந்து வைக்கப்படுவதுடன் இலவங்குளம் ஊடாகச் செல்லும் மன்னார்-புத்தளம் வீதியும் திறந்து வைக்கப்படும்.

அத்துடன் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடபுல முஸ்லிம்கள் அனைவரும் விரைவில் மீள்குடியேற்றப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும் என்றார். (2-6)

# ஐக்கிய இலங்கைக்குள் இரண்டு தலைவர்களின் கீழ் ஆட்சி

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் இரண்டு தலைவர்களின் கீழ் ஆட்சி நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கு தனியான இராச்சியம் ஒன்றும் சிங்களவர்களுக்கு தனியான இராச்சியமொன்றும் உருவாக்கப்படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகால சட்ட நீடிப்பு தொடர்பில் உரையாற்றும் போது அவர் இந்தக் கருத்தினை முன்வைத்துள்ளார்.

அதில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 ஆயிரம் தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சீன அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கை அரசாங்கம் வடக்கில் இராணுவ முகாம்களை நிறுவி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் பிரதேச மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதனை எவரும் சரியாக புரிந்துகொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)


# வேலைவாய்ப்பு

நன்மைகள்




ஜோன்கீல்ஸ் PLC யின் உறுதிப்பாட்டுடனும், பலத்தின் பின்னணியுடனும் இயங்கும் இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸின் புத்தாண்டிற்கான

## பதவி வெற்றிடங்கள்

யாழ் பிராந்திய கிளைக்கான (வடமராட்சி பிரதேசம் தவிர்ந்த) வேலையற்றவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்

- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதிமுகாமையாளர்
- ↑ தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- ↑ சிரேஷ்ட தனிப்பட்ட நிதி ஆலோசகர்
- ↑ தனிப்பட்ட நிதி ஆலோசகர்
- ↑ காப்புறுதி ஆலோசகர்

வன்னிப் பிரதேசத்தில் இருந்து வருகை தந்து தற்போது குடாநாட்டில் வசித்துவரும் வேலையற்று இருக்கும் இருபாலாரும் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றலாம்

உங்களது வாழ்க்கையை ஒளிமயமாக்க இன்றே இணையுங்கள் யூனியன் அஷ்யூரன்ஸில்

தகைமைகள்:- க.பொ. த. உயர்.தரத்தில் சித்தி (ஆகக் குறைந்த தகைமை)
காப்புறுதித்துறையில் அல்லது வியாபார மேம்படுத்தலில் முன்னனுபவம் விரும்பத்தக்கது (கட்டாயம் அல்ல)

### தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது

→ உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
→ உங்கள் வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கான ஆர்வம்
→ திடசித்தம்

ஏன் தயக்கம் தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுய விபரக் கோவையுடன்
நேர்முகத் தேர்வு:- காலம் : திங்கட்கிழமை (11.01.2010)
நேரம் : முற்பகல் 9.30 மணி
இடம் : யூனியன் அஷ்யூரன்ஸ்
139, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

தொடர்புகளுக்கு : 021 222 3753
077 9116282

காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
சோதி, றஜீவன், றொக்சன், உஷா

## டெங்கு ஒழிப்பு பரப்புரைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவினால் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான பரப்புரைக் கூட்டங்களை கோப் பாய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாட சாலைகள், பொது இடங்கள், பொது நிறுவ னங்களில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

பிரிவின் தொண்டர்களின் உதவியுடன் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான துண்டுப் பிரசு ரங்கள் விநியோகிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-134)

**வடமராட்சியில்**

## வைத்தியசாலைகளின் உள்ளக வீதிகள் புனரமைப்பு

(வடமராட்சி)

வடமராட்சியில் மூன்று வைத்தியசாலை யின் உள்ளக வீதிகள் புனரமைக்கப்படவுள் ளன. பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை, ஆத்தியடி வைத்தியசாலை, வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியசாலைகளினது வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வீதி அபிவிருத்தி திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (6-10)

## சிறுவணிக முகாமைத்துவ கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படவுள்ள சிறுவணிக முகாமைத் துவ கற்கைநெறி 2010/2011 கல்வியாண்டு புதிய பிரிவுக்கான ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள் ளது.

இதில் கற்கைநெறிக்கு மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள் ளுமாறு இணைப்பாளர் கேட்டுக்கொள்கின் றார். (6-30)

## புதிய நிர்வாகத்தினை தெரிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பதிவு செய் யப்பட்ட அனைத்து சனசமூக நிலையங் களும் 2010 ஆம் ஆண்டிற்குரிய புதிய நிர்வாக அங்கத்தவர்களினை தெரிவு செய்து அதன் விபரங்களினை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பதாக யாழ். மாநகர சபைக்கு அனுப்பிவைக்குமாறு ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (6-30)

## தர்மாசிரியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டிற்கான இந்துதர்மாசிரியர் கருத்தரங்கு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை வேம்படி மகளிர் கல்லூரி மண்ட பத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.குடாநாட்டு அறநெறிப் பாடசா லையில் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் பொறுப்பாசிரியர்களை யும் கலந்துகொள்ளுமாறு அறநெறிப் பாட சாலை உதவிப் பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் கேட்டுக்கொள்கிறார். (6-2)

## யாழ்.பிரதேச செயலகத்தினரால் சிரமதானப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ். பிரதேச செயலகத்தினரால் விழிப்புணர்வு மற்றும் சிரமதானப் பணிகள் என்பனவற்றை இன்று வியாழக்கிழமை நடைமுறைத்தவுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சிரமதானப் பணிகளில் பிரதேச செய லக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலர் இணைந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் ஆஸ்பத்திரி வீதி, ஆரியகுளச் சந்தி போன்ற பல இடங்களில் மேற் கொள்ளப் படவிருக்கும் இப்பணியின் போது அகற்றப்ப டும் கழிவுகளை எடுத்துச்சென்று கொட்டுவ தற்குரிய ஏற்பாடுகளுக்கு யாழ்.மாநகர சபை ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

அத்துடன் சமூக அமைப்புக்கள் உதவியு டன் விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் சிரம தானப் பணிகளினை முன்னெடுப்பது என்ப வற்றை தற்போதைய நிலையில் முதற்கட்ட செயற்பாடாக அமைவதுடன் இப்பணிகளி னை இனிவரும் காலப் பகுதியிலும் தொடர் ந்து தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும், குறிப் பாக மக்கள் தாம் குடியிருக்கும் சுற்றாடலை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் எனப் பிரதேச செயலகத்தினர் கேட்டுக்கொள்கின் றனர். (2-30)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ள சமூகவியல் துறைசார் விழிப்புணர்வு கருத் தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பிராந்திய நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

திறந்த பல்கலைக்கழக சமூகவியல் கற் கைககள் துறையின் தலைவர், பேராசிரியர் எ.எஸ்.சந்திரசேகரபோஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்பும் சமூக ஆர்வலர்கள், ஆசிரி யர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (6-30)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுடனான கலந்து ரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது விளையாட்டுக் கழகங்க ளின் மீள்பதிவு 2010 ஆம் ஆண்டிற்குரிய விளையாட்டு விழா போன்ற பிற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதால் விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செய லாளர் ஆகியோர் தவறாது கலந்துகொள்ளு ம் படி கேட்கப்பட்டுள்ளது. (6-30)

## அநாதரவான நிலையில் தண்ணீர் தொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச சபை மூலம் நாயன் மார்கட்டு பாரதி வீதி மக்களுக்கு தண்ணீர் வழங்க வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் பல இலட்சம் ரூபா செலவில் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் கட்டப் பட்ட மூன்று தண்ணீர் தொட்டிகள் தண்ணீர் வழங்கப்படாது அநாதரவான நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி கள் நேரில் பார்வையிட்டு இக் குறைபாடு களை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென எதிர்பார்ப்பதாக அவர்கள் கூறியுள் ளனர். (134)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதி யான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ் வில் நாளை வெள்ளிக்கிழமை நுண்கலை மானி செல்வி யோகராசா யோகாஞ்சனா வின் இன்னிசை கச்சேரி இடம்பெறவுள் ளது. (6-4-35)

## பருத்தித்துறை பஸ்சேவைகள் மீண்டும் பரு.நகரப்பகுதியிலிருந்து ஆரம்பம்

(வடமராட்சி)

பருத்தித்துறை சாலை பஸ் சேவைகள் மீண்டும் பருத்தித்துறை நகரப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நகரப்பகுதி யில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வந்ததால் தற்காலிகமாக பஸ் சேவைகள் சிவன் கோயிலில் பகுதியில் இருந்து நடை பெற்று வந்தது. இம் மாதம் முதல் இ.போ.ச. பஸ் சேவைகள் அனைத்தும் நகரப்பகுதியிலி ருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதே வேளை தனியார் பஸ் சேவைகள் தற்போது சிவன் கோவில் பகுதியில் இருந்து நடைபெற்று வருகிறது. (6-10)




## நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங் களின் இணையத்தின் பொதுச்சபைக் கூட்டத் தில் இவ்வாண்டுக்கான புதிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள் ளனர்.

இதில் தலைவராக சி.வி.கே.சிவஞானம், உப தலைவராக வி.கேசவன், செயலாளராக ஜேசன் ஜெ.செல்வராஜா, உபசெயலாளராக செல்வி பி.ஜமுனாதேவி, பொருளாளராக ஏ.கே.சிவசுப்பிரமணியம் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக திருமதி பொன் மலர் இராஜேஸ்வரன், கே.செந்தூரன், கே.சிவசுந்தரமூர்த்தி, ஆர்.ஏ.திலகரட்ணம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ள னர். (6-4)




இலங்கை அவுஸ்திரேலிய நட்புறவு சங்கத்தினால் யாழ்.மாவட்ட அவசர அம்புலன்ஸ் சேவைக்கென 8 மில்லியன் ரூபா பெறுமதியான அம்புலன்ஸ் வண்டி வழங்கும் நிகழ்வு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் தேசிய குருதி மாற்று சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஆனந்தகுணசேகர அம்புலன்ஸ் வண்டிக்கான திறப்பை கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

## ஓர் பணிவான வேண்டுகோள்

**கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது அமைப்புக்களுக்கானது**

தற்போது யாழ்ப்பாணத்தில் பரவி வரும் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த உங்கள் அனைவரது ஒத்துழைப்பும், பங்களிப்பும் மிக அவசியம்.

முதலில் டெங்கு நோய் எமது மாவட்ட மக்களுக்கு அதிகளவு அறிமுகமில்லாத ஒரு நோய். எனவே இந்நோயைப் பற்றியும் அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவ்து அவசியம். சமூக மட்டத்தில் டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்குகளை நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதில் எமது சுகாதார வைத்திய அதிகாரிகள் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்துகொண்டு விளக்கமளிப்பார்கள்.

இதற்கென உங்கள் பிரதேசத் திலுள்ள பொது சுகாதாரப் பரிசோ தகர்களுடன் தொடர்பு கொள்ளவும். முக்கியமான டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையான டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் சிரமதானப் பணியை உங்கள் ஊரின் பொது இடங்களில் ஒழுங்கு செய்ய வேண்டும். இதற்கென உங்கள் ஊர் மக்களின் ஒத்துழைப்பினை யும் பங்களிப் பினையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**டெங்கு கட்டுப்பாட்டு வாரம்**

நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைத்தால் மட்டுமே இந்நோயை நாம் கட்டுப்படுத்தலாம். எனவே இந்த டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கு நோயை ஒழிக்க ஒன்றுபடுவோம்.

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்**
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

# நிலக்கடலைப் பயிர்ச்செய்கை

**நடுகைக்காலம்:-**

காலபோகத்தில ஐப்பசி 3ம், 4ம் வாரம் சிறந்தது. எனினும் தற்போதைய கால நிலையில் பெருமழை பெய்து முடிந்தவுடன் மேட்டுக்காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும்.

**நடுகை:-**

மழைகாலங்களில் வரம்புசால் முறையில் நடுகைசெய்ய வேண்டும். அத்துடன் வடிகாலமைப்பினைக் கொண்ட தெல்லுப்பாத்தி முறையினைப் பயன்படுத்தி மழைகாலத்தில் நடுகை யினை மேற்கொள்ளமுடியும். கொடிகாமம் வடக்கு, தாவளை, இயற்றாளை போன்ற பகுதிகளில் தென்னந் தோட்டங்களில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளமுடியும். நடுகையின் போது வரிசைக்கிடையில் 45cm இடைவெளியிலும் வரிசையில் 15cm இடைவெளியிலும் நடுகை செய்யவேண்டும். முளைதிறன் சிறப்பாகவுள்ள வீரிய விதை நிலையத்திற்கு ஒன்று போதுமானதாகும். முளைதிறன் குறைவாக இருப்பின் நிலையத்திற்கு 2விதைகள் வீதம் நடுகை செய்யலாம்.. விதை நடும் போது 2 - 2.5cm ஆழத்தில் நடுகை செய்தல் வேண்டும். உயர் விளைவைப்பெற எல்லா நிலையங்களிலும் பயிரை உருவாக்குவதில் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும்.

மேலும் விதை முளைக்கும்போது பறவைகள் கொத்தி முளையத்தைச் சேதப்படுத்துவதனால் அந்த நிலையம் வெற்றிடமாகும். எனவே பறவைகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, யாழ் மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு நிலக்கடலைச் செய்கையில் சிறந்த விவசாயியாகத் தெரிவு செய்யப்பட்ட விவசாயி சி.சிறிக்குமார் தெரிவித்ததறகமைவாக 2விதைகள் வீதம் நெருக்கமாக நடுதல் வேண்டும். பின் பயிர முளைத்து 2 - 3 வாரங்களின் பின் 45 x 15 cm பயிரிடை வெளியில் வீரியமற்ற தாவரங்களை ஐதாக்கி தகுந்த பயிரடர்த்தி பேணப்படுவதன் மூலம் உயர் விளை வைப் பெற்றுக்கொளளலாம்.

**விதைப் பரிகரணம் :-**

நாற்றுப் பருவத்தில் ஏற்படக்கூடிய பங்கசு நோயான காறையழுகலிருந்து பாது காப்பதற்கு 3கிராம் கப்ரான் அல்லது 1.5 - 2கிராம் திராமினை 1கி.கி விதையுடன் கலந்து விதைப்பரிகரணம் செய்த பின்னர் நடுகை செய்யவேண்டும்.

**பசளைப் பாவனை :-**

**சேதனப்பசளைப்பாவனை:-**

ஒரு தொன் நன்கு உக்கிய எரு அல்லது கூட்டெருவினை ¼ ஏக்கர் நிலத்திற்கு இட்டு மண் ணுடன் கலத்தல் வேண்டும். இடப்படும் உக்கிய கூட்டெருவானது மண்ணினைத் தாங்கலாக வைத்திருப்பதனால் நிலக்கடலை விருத்தியடை தல் இலகுவாக்கப் படுகின்றது.

**இரசாயனப்பசளைப் பாவனை:-**

**அடிக்கட்டுப் பசளை :-**

தரை நன்கு ஈரமாக இருக்கும் நிலையில் விதையிடுவதற்கு முன்பாக அடிக்கட டுப்பசளை இடல் வேண்டும். மூன்று பசளைகளையும் ஒன்றாகக் கலந்து விதைகளை நடுவதற்கு முன்பு நடவேண்டிய வரிசையில் அடிக்கட்டுப்பசளையைத் தூவி கூரான தடியால் கீறி மண்ணுடன் நன்கு கலந்து விடல் வேண்டும். இதனால் விளைவின்போது தரமான மணிகள் உருவாவதை உறுதி செய்யலாம். மேலும் சேமிக்கும்போது நிறை குறைவதையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

**மேற்கட்டுப்பசளை:-**

பூ உருவாகும்போது மேற்கட்டுப் பசளையை இடுவதால் தாவரத்திலிருந்து உருவாகக் கூடிய பூக்கள் அனைத்தையும் ஒரே தடவையில் பூக்கத் தூண்டலாம். இதனால் அறுவடையின் போது நிரம்பாத நிலக்கடலையின் எண்ணிக்கையை குறைக்க முடியும்.

**நிலக்கடலைச் செய்கையில் ஜிப்சம் பாவனை:-**

நிலக்கடலையில் விழுதுகள் தோன்றும் போது 1000சதுரமீற்றருக்கு 5கிலோ ஜிப்சம் எனும் அடிப்படையில் மேற்கட்டுப் பசளையுடன் சேர்த்து இடப்படுதல் வேண்டும். இதனால் நிரம்பிய மணிகள் உருவாக்கப்படும்.

**மண் அணைத்தல்:-**

நிலக்கடலை நடுகை செய்து 3ம் வாரமளவில் மண் அணைத்தல் மேற்கொள்ளப்படவேண்டும். மண் இறுக்கமாகக் காணப்படின் விழுதுகள் மண்ணினுள்சென்று கூடியளவு காய்களை உருவாக்கமாட்டாது. எனவே பயிர் பூக்க ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் களைகளை மண்வெட்டியினால் சாறி அகற்றுவதுடன் இரண்டு வரிசைகளிற்கிடைப்பட்ட வெளியின் நடுப்பகுதியில் சாலினை உருவாக்கும் வகையில் மண்வெட்டியினால் மண்ணை இழுத்து மெல்லிய படையாக இரண்டு பக்கமும் இடுதல் வேண்டும். இச் செயற்பாட்டின் போது நிலக்கடலைத் தாவரத்தின் அடிப் பகுதியில் மண் மெல்லிய படையாக விழுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் விழுதுகள் மண்ணினுள் இலகுவாக சென்று காய்களை உருவாக்குவதால் கூடிய விளைவைப் பெறலாம். இதன்போது மேற்கட்டு பசளை இடுதல் சிறந்தது.

**நீர்ப்பாசனம்:**

நடுகை செய்து 4வாரம் வரை 4நாட்களுக்கு ஒரு தடவையும், 45நாட்களுக்குப் பின் மண்ணின் நீர் இழக்கப்படும் தன்மையைப் பொறுத்து 5 - 7 நாள் இடைவெளியிலும் நீர்பாய்ச்ச முடியும். அதாவது நிலக்கடலையில் வாடல் அறிகுறி ஆரம்பிக்கும் நிலையில் நீர்பாய்ச்ச வேண்டும். நீர்ப்பாசனத்தின் போது வெள்ளப்படுத்தி நீர்பாய்ச்சல் தவிர்க்கப்பட வேண்டும். மேலும் தூவல் நீர்ப்பாசத்தின் கீழ் சிறப்பான முறையில் நிலக்கடலைச் செய்கையினை மேற்கொள்ளலாம். இவ்வாறு தூவல் நீர்ப்பாசத்தினைப் பயன்படுத்தினால் தேவையான நேரம், தேவையான அளவு நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளலாம். நீர்ப்பாசனம் கூடுதலாயின் பதியவளர்ச்சி கூடுதலாக ஏற்பட்டு போலிப் பூக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால் உருவாகும் நில்க்கடலையின் எண்ணிக்கை குறைவடையும்.

**பெரியானோடையில் தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிலக்கடலைச் செய்கை களைக்கட்டுப்பாடு:-**

விதை நடுகை செய்து 3ம் வாரமும் 6ம் வாரமும் களை கட்டுப்படுத்தல் சிறந்ததாகும். வரிசை விதைப்பில் வரிசைகளிடையே உள்ள களைகளை கைகளினால் அல்லது மண்வெட்டி மூலம் அகற்றி குறைந்த செலவுடன் முகாமைத்துவப்படுத்தலாம்.

| காலம் | யூரியா ($1000m^2$) | ரி.எஸ்.பி ($1000m^2$) | எம்.ஒ.பி($1000m^2$) |
|---|---|---|---|
| அடிக்கட்டு | 3.5 | 10 | 7.5 |
| மேற்கட்டு(4ம் வாரம் பூக்கும் போது) | 3 | - | - |

**பீடைக்கட்டுப்பாடு:-**




**அகிழான்-**

நிலக்கடலைச் செய்கையில் நிலத்தினுள் கடலை விருத்தியடையும்போது அகிழான் முக்கிய பீடையாகக் காணப்படுகின்றது. அகிழானானது மண்ணினுள் சென்று நிலக்கடலையில் உருவாக்கப்படும் மணிகளை உண்ணுகின்றது. இதனால் பெறப் படும் விளைவு குறைவடைகின்றது. எனவே அகிழானின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவதற்கு மேற்படித் திட்டத்திற்கூடாக அகிழான் பொறி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.


**அகிழான் பொறியின் பகுதிகள்**

கடலை உருவாகும் பருவத்தில் வயலில இவ் அகிழான் பொறியினைப் பல இடங்களில் வைத்தல் வேண்டும். மேற்படி அகிழான் பொறியினுள் காணப்படும் கம்பியில் தேங்காய்சொட்டு அல்லது நெத்தலியினை வைத்து கட்டி படத்தில் காட்டியவாறு நெம்புடன் இணைத்தல் வேண்டும். அகிழான் அல்லது எலி உட்சென்று உணவினைப் பற்றிப்பிடிக்கும்போது கம்பியானது நெம்பிலிருந்து விடுபடுவதனால் பொறியின் வாயிற்கதவு கீழ நோக்கி அசைந்து வாயிலை மூடிக்கொளளும். இதனால் பொறியினுள் அகிழான் உயிருடன் பிடிபடும். பிடிக்கப்பட்ட அகிழான் அல்லது எலியினை அடித்துக் கொல்ல வேண்டும்.

முற்புறத் தோற்றம்




பிற்புறத் தோற்றம்




**நோய்க்கட்டுப்பாடு**

**இலைப்புள்ளி –**

இந்நோயின் அறிகுறியாக முதிர்ந்த இலைகளில் கபில நிறமான புள்ளிகள் காணப்படும்.

இப்புள்ளிகள் இலைகளின் மேற்புறத்தில் கடுமையான நிறமுடையவையாக காணப் படும்.

இலை மேற்பரப்பில் பங்கசு வித்திகள் உருவாவதைக் கட்டுப்படுத்த குளோரோதனோலில்

(டகோனில்) 75% நனையகூடிய தூள் 20ப/10l நீரில் கலந்து விசிறவும். 1000m2 இற்கு குளோரோதனோலில் (டகோனில்) 75% 130g போதுமானதாகும். (16l கொண்ட 4 தாங்கி)

**அடி அழுகல -**

இந் நோயின் அறிகுறியாக பயிர் பூக்க ஆரம்பிக்கும் காலத்தில் தண்டின் அடிப் பகுதி. கபில நிறமாக மாறி அழுகும். பின் தாவரம் வாடி மஞ்சள் நிறமாகி இறக்கும் இதனை கட்டுப்படுத்த தயோபெனெட் மீதைல் 70% பங்கசு நாசினி 30கிராம் 50லீற்றர் நீரில் கரைத்து பாதிக்கப்பட்ட தாவரத்தை அகற்றியபின் அவ்விடத்திற்கும் சுற்றியுள்ள பிரதேசத்திற்கும் விசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். $1000m^2$ இற்கு 3kg தயோபெனெட் மீதைல் 70% பங்கசு நாசினி போதுமானதாகும்.

**அரும்பு கருகுதல்:-**

இந்நோயின் அறிகுறியாக விழுதுகள் தோன்றி பூக்கும் காலத்தில் இலைகளில் வெளிறிய வளையப்புள்ளிகள் தோன்றும். இலைக்காம்புகள், முனைஅரும்புகள் என் பன வெளிறும். தாவரங்களின் வளர்ச்சி குன்றி சித்திரவடிவான இலைச்சுருக்கங்கள் காணப்படும். இந்நோயின் காவிகளான பனிப் பூச்சியை சிபாரிசு செய்த பூச்சிநாசினிகளான பிப்றோனில் (றீயென்ற்) 10ml /10l நீரில் அல்லது இமிடோகுளோபிறிட் (அட்மயர்) 10ml /10l நீரில் கரைத்து விசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். $1000m^2$ இற்கு 40ml பிப்றோனில் அல்லது இமிடோகு ளோபிறிட் (16l கொண்ட இரு தாங்கிகள்) விசிற முடியும்.

**அறுவடை:-**


**அறுவவடைக்கு ஏற்ற பருவம்.**

செடியில் உள்ள காய்கள் 75 - 80% வரை முதிர்ச்சியடையும்போது அறுவடையை மேற்கொள்ள வேண்டும். செடியின் இலைகள் மஞ்சள் நிறமாகவும், தோட்டத்தில் எழுந்தமானமாக செடிகளைப் பிடுங்கி நிலக்கடலையினை உடைத்துப் பார்க்கும் போது கோதின் உட்பகுதி கபில நிறமாகக் காணப்படின் அறுவடை செய்யலாம்.

செடிகள்ளக் கவனமாகப் பிடுங்கி வயலில் பரவி வைத்தல் வேண்டும். செடியிலிருந்து மண்ணை உலர்த்தியபின் நிலக்கடலையை வேறாக்கி நிழலான இடத்தில் உலரவிட வேண்டும்.

**விளைச்சல்:-**

சிறந்த பராமரிப்பின் கீழ் 1000ச.மீ இடப பரப்பில் இருந்து 250-300kg நிலக்கடலையை விளைவாகப் பெறமுடியும்.



**பதனிடல்:-**

அறுவடை செய்த காய்களை. நன்கு சுத்தம் செய்து நிழலில் உலர்த்தவும். நிழலில நீண்ட நாள் உலர்த்துவதன் மூலம் விதைகளின் வாழ்தகவை பாதுகாக்க முடியும். கடுமையான வெய்யிலில் உலர்த்துவதனால் விதைகளின் முளைதிறன் பாதிக்கப்படும்.

**சேமித்தல்:-**

காய்ந்த விதைகளை சாக்குகளில் அல்லது உரைப்பைகளில் இட்டு இறுக்கமாகக் கட்டி காற்றோட்டம் உள்ள இடத்தில் சேமிக்க வேண்டும். விதைகளைச் சேமிக்கும் போது அணில் அல்லது எலி என்பவற்றின் தாக்கம் காணப்படின் அகிழான் பொறி பயன்படுத்த முடியும்.

எனவே இப் பெரும்போகத்தில் நிலக்கடலைப் பயிர்ச்செய்கை நடவடிக்கையினை சிறப்பான முறையில் மேற்கொண்டு கூடிய வருமானத்தைப் பெற்று நிலைபேறான விவசாயத்திற்கு வழிவகுப்போம். (முற்றும்)

திருமதி. ப.மீனலோஜினி
(விவசாயப்போதனாசிரியர்)
இ.சௌந்தராஜன் (பாடவிதான உத்தியோகத்தர் மறுவயல் பயிர்)
சி. சிவகுமார்
பிரதி விவசாயப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

# தம்பரஅமில தேரரை விடுவிக்க கோரி பிக்குகள் பேரணி

(கொழும்பு)

நாட்டின் ஜனநாயகத்திற்காகவும் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் எனக் குரல் கொடுத்த தம்பர அமிலதேரரை உடனடியாக விடுவிக்குமாறு கோரி பௌத்த பிக்குகள் பொரல்லை திலக்கரட்னராய விகாரைக்கு அருகில் இருந்து விஹாரமஹா தேவி பூங்காவில் உள்ள புத்தர் சிலை வரை நேற்று முன்தினம் பேரணியொன்றில் ஈடுபட்டனர்.

புத்தர்களை சித்திரவதை செய்யும் ராஜபக்ஷ அரசாங்கத்தை உடனடியாக இல்லாதொழிப்போம் என்ற தொனிப் பொருளில் இந்த பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியில் தேசிய பிக்கு முன்னணியின் செயலாளர் அத்தனகல்லே சமித தேரர் உள்ளிட்ட ஏராளமான பௌத்த பிக்குகள் கலந்துகொண்டனர். (2-6)

# 3 வருட திட்டத்தின் கீழ் வடக்கினை முழுமையாக கட்டியெழுப்ப நடவடிக்கை

**-வடமாகாண ஆளுநர்-**

மோதல் காரணமாக சேதமடைந்தள்ள வட பகுதியை வடக்கின் வசந்தம் 3 வருட திட்டத்தின் கீழ் முழுமையாகக் கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 071 மில்லியன் செலவிடப் படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் பி.சந்திரசிறி தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் வீதி மின்சாரம், நீர், போக்குவரத்துத்துறை, உட்கட்டமைப்பு வசதிகள் , தபால்துறை அடங்கலான சகல துறைகளும் அபிவிருத்தி செய்யப்படும் . இதன்படி வடக்கிலுள்ள சகல கிராமங்களுக்கும் 2 வருடங்களில் முழுமையாக மின்சாரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதற்காக 16 ஆயிரத்து 829 மில்லியன் ரூபா செல விடப் படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜாதிகவிய (தேசத்தின் வலு) கமநெகும (எழுச்சியுறும் கிராமம்) திட்டங்களின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் மேம் படுத்தப் படவுள்ளதோடு மேலும் அபவித்திட்டத்தின் கீழ் ஏ-9, ஏ-32 அடங்கலான சகல பிரதான வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருவதோடு கிராமிய வீதிகளும் மீளமைக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(2-6)

# 2010 புத்தாண்டு பலன்கள்

## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம் வரை

**விடாமுயற்சியால் வெற்றி குவியும்!**

**அல்லல்கள் எத்தனை வந்தாலும் கொள்கைகளை மாற்றிக்கொள்ளாத சிங்கராசி நேயர்களே!**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்களுக்குப் பொருள் வளம் குவியும் விதத்தில் கிரக நிலைகள் சஞ்சரிக்கின்றன. படை பலத்தோடு இருந்த நீங்கள் இப்பொழுது பண பலத்தையும் காணப்போகிறீர்கள். வருடத் தொடக்கத்தில் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால், உற்சாகத்தோடு செயல்படத் தொடங்குவீர்கள். உடன் இருப்பவர்களும் உங்களுக்கு ஒத்துழைப்பு தருவர்.

ராசிநாதன் சூரியன், சுக்ரன், புதனுடன் கூடி ஐந்தில் சஞ்சரித்து இந்த ஆண்டு தொடங்குவதால், நல்ல நல்ல சந்தர்ப்பங்கள் எல்லாம் உங்களை நாடி வரப்போகின்றன. வரும் வாய்ப்புக்களை எல்லாம் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். ஏழரைச் சனியில் குடும்பச் சனி நடப்பதால், குடும்பத்தில் இீருந்த குறைகள் அகலும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

ஜுலை 21 முதல் செப்டம்பர் 6 வரை செவ்வாயும்,சனியும் கன்னி ராசியில் இணையும் நேரத்தில்தான் உங்கள் எண்ணங்கள் நிறைவேறாமல் இடையூறுகள் வந்து சேரும். அக்காலத்தில் வழிபாடுகள் உங்கள் வளர்ச்சிக்குக் கை கொடுக்கும். பகை கிரகங்கள் இரண்டும் சேர்ந்து செயல்படும் பொழுது, கூட்டாளிகளிடம் கவனமாக இருப்பது நல்லது. நீங்கள் காரியத்தைத் தொடங்கும் முன் யோசித்துச் செய்வதால் கைகூடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இணைந்து செயல்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல் பணிந்து வணங்கி, பரிகாரங்கள் செய்து யோகபலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்கும் சென்று வந்தால் வளர்ச்சி மீது வளர்ச்சி ஏற்படும். வருமானமும் வந்து கொண்டே இருக்கும்.

பெயரியல் முறையில், எண்கணித அடிப்படையில், சூரியன் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்சநிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிர்காலமும் சிறப்பாக இருக்கும். குருவிற்குரிய ஆண்டாகக் கருதப்படும் இந்த 2010, குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகிறதோ அந்தந்த இடங்களிலெல்லாம் நல்ல மாற்றங்கள் வந்து சேரும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

1-1-2010 முதல் 30-4-2010 வரை

இக்காலம் உங்களுக்கு இனிய காலமாகும். எதைத் தொட்டாலும் வெற்றி பெறும் நேரமிது. மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும் அளவிற்கு வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். ஏழரைச் சனி காலத்தில்,இதைச் செய்வோமோ? அதைச் செய்வோமோ? என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் குருவின் பார்வை உங்களுக்கு கை கொடுத்து உதவப் போகிறது. வியாழ நோக்கம் செயல்படுவதால் திருமண முயற்சிகள் வெற்றி பெறும். இதுவரை தேடித் தேடி வந்து திரும்பிச் சென்ற வரன்கள் இனித் தாமாகவே உங்கள் இல்லம் தேடி வரும்.

குருவின் பார்வை பதியும் இடங்கள் புனிதமடைந்தாலும்,சனி வக்ர கதியில் இக் காலத்தில் இயங்குகிறார். பொதுவாக 6,7 க்கு அதிபதி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது கட்டுக்கடங்காத செலவுகள் வந்து சேரும். திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் தனவரவும் வரலாம். திடீர் விரயமும் உருவாகலாம். எதிரிகள் மனநிலை மாறுவதைப் போல பேசுவதைக் கண்டு நம்பி விடுவீர்கள். இல்லத்திலும் உடன் இருப்பவர்கள் உதவிக்கரம் நீட்டாமல் உபத்திரவங்களைச் செய்யலாம்.

வக்ரச் சனியின் பார்வை பலத்தால் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள, நாம் அக்கறை காட்ட வேண்டியதெல்லாம் சனீஸ்வர வழிபாட்டில்தான். சனிக்கிழமை தோறும் விரதங்களையும், வழிபாடுகளையும் மேற்கொள்வதோடு, எள் தீபம் ஏற்றி எதிரில் வைத்தால் நல் வாழ்வு அமையும். சனியின் பாதசார மாற்றத்தைப் பொறுத்துப் பலன்களும் மாறுபடும்.

1-5-2010 முதல் 31-8-2010 வரை

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். எனவே பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் உருவாகலாம். நல்ல காரியங்கள் ஏற்படுவதில் தாமதம் ஏற்படாமல் இருக்க உறவினர்களைப் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. அஷ்டமாதிபதியாகவும் குரு இருப்பதால் இழப்புக்களை ஈடு செய்ய யாரேனும் ஒருவர் கொடுத்து உதவ முன் வருவார். உடல்நிலையில் ஏற்படும் தொல்லைகளைப் போக்கிக் கொள்ள மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது.

கடல் பயண வாய்ப்புகளையும் மற்றும் தூரதேசப் பயணங்களையும், உபயோகப் படுத்திக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படலாம். அதே நேரத்தில் மீன, குருவின் ஆதிக்கத்தால் அதன் பார்வை பதியும் 2, 4, 12 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. இதன் விளைவாக குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் ஒவ்வொன்றாக மறையும். கொடுக்கல், வாங்கல்களில் ஸ்தம்பித்துப் போயிருந்த தொகை வந்து சேரும். பெற்றோர்கள் உங்கள் பிரச்சினைக்கு வடிகாலாக இருப்பர்.

கடன் கேட்ட இடத்தில் கிடைக்கும் என்பதால், வங்கிகளைத் தேடிச் சென்று வாங்கி தொழிலை விரிவுபடுத்துவீர்கள். வாழ்க்கைத் தேவை கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். பால்ய சினேகிதர்கள் பக்கபலமாக இருந்து காரியங்களை முடித்துக் கொடுப்பர். இடம், பூமி வாங்கி அதைப் பத்திரப் பதிவு செய்யாமல் இருப்பவர்கள் அதை முழுமையாக ஒழுங்கு செய்து கொள்வர். வாகன யோகம் உண்டாகும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்களை வாங்கி குதூகலமடைவீர்கள். தட்டுப்பாடுகள் அகலும்.

குருவின் பார்வை விரயஸ்தானத்தில் பதிவதால் உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய திறமை மிக்கவர்கள் பின்னணியாக இருப்பர். உங்கள் ஆவல்கள் அனைத்தும் பூர்த்தியாகும். அடுத்தவர் நலன் கருதி வாங்கிக்கொடுத்த தொகை வந்து சேரும். புகழ் ஏணியின் உச்சிக்குச் செல்லும் வாய்ப்பும் புதிய திருப்பங்களும் உங்களுக்கு ஏற்படலாம்.

பழைய தொழிலை விட்டு விட்டு புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு ஏற்படும் சனி, செவ்வாய் இணையும் நேரத்தில் மட்டும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டினால் தான் குறைகள் அகலும்.

1-9-2010 முதல் 31-12-2010 வரை

இக் காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். இருப்பினும் சனி வக்ர நிவர்த்தியாகிறார். எனவே மதிப்பும், மரியாதையும் உயரும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். இனிப்பான செய்திகள் உங்களைத் தேடி வந்து கொண்டேயிருக்கும். பகை சூழ வந்த வாழ்க்கை இனி பாராட்டும் விதத்தில் மாறப் போகிறது. நகையும், தொகையும் வந்து கொண்டேயிருக்கும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் வீட்டைத் தேடி வந்து வெற்றிக்கு வித்திடுவர்.

செப்டம்பர் 22 ஆம் திகதி செவ்வாயும் சுக்ரனும் துலா இராசியில் இணைகிறார்கள். அதன் பிறகு அக்டோபர் மாதத்தில் சூரியனும், சுக்ரனும், புதனும் அதே இடத்தில் சஞ்சாரம் செய்கிறார்கள். இந்தப் புத-சுக்ர யோகமும், புத-ஆதித்ய யோகமும் உங்களுக்குப் புதிய பாதையை அமைத்துக் கொடுக்கப் போகிறது. வாழ்க்கைத் தேவைகளை ஒவ்வொன்றாக பூர்த்தி செய்து கொள்வீர்கள். வசந்த காலம் உருவாகும். பிரதோஷ வழிபாடு பெருமைகளைச் சேர்க்கும்.

ராசிநாதன் சூரியனைப் பலப்படுத்த சிவாலய வழிபாட்டை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

வருடத் தொடக்கத்தில் சிம்ம ராசிப் பெண்களுக்குப் பணப்புழக்கம் அதிகரிக்கும். பகை மாறும். மனதில் இருந்த கவலைகள் ஒவ்வொன்றாக மாறும். மே மாதத்திற்கு மேல் திடீர் இடமாற்றங்கள், ஊர் மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. புகுந்த வீட்டில் உங்களுக்குள்ள மதிப்பும், மரியாதையும் உயரும். உங்கள் பெயரிலேயே இடம் அல்லது வீடு வாங்கும் அமைப்பு ஆகஸ்டிற்கு மேல் வந்து சேரப் போகின்றது. சுய ஜாதகத்தில் தெசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டு வருவதோடு, யோக பலம் பெற்ற நாளில் வைரவரையும் வழிபட்டு வந்தால் யோகங்கள் வந்து சேரும்.

**சிவல்புரி சிங்காரம்**

(தொடரும்)

# வாழக்கூடிய அனைத்து இனமக்களுக்கும் இந்நாடு உரிமையானது; சொந்தமானது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

இந் நாடு சிங்கள மக்களுக்கு மாத்திரம் தான் சொந்தமானது என்று எந்தவொரு வெளிநாட்டு ஊடகத்துக்கும் தாம் தெரிவிக்கவில்லை என்று ஜெனரல் சரத்பொன்சேகா நேற்று முன்தினம் காத்தான்குடியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலத்திலே நான் வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு சொன்ன செய்தி பிழையான முறையில் திரிபடுத்தி சொல்லப்பட்டிருந்தது. நான் இந்த நாடு சிங்கள் வருக்கு மாத்திரம் தான் உரிமையான நாடு என்று சொன்னதாக அதில் கூறப்பட்டிருந்தது.

இந்த நாடு வாழக்கூடிய அனைத்து இன மக்களிற்கும் உரிமையானது, சொந்தமானது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அரசியலமைப்பிலே திட்ட வட்டமான முறையிலே சொல்லப்படுகிறது. எனது நோக்கம் வாழக்கூடிய அனைத்து இன மக்களும் சமத்துவமாகவும் சமானமாகவும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் ஒரே நாட்டவராக வாழ வேண்டும். அது மாத்திரமல்லாமல் தமது எதிர்கால சந்ததி தெளிவான முறையில் வாழக்கூடிய நாட்டில் வாழ வேண்டும் என்ற நிலமையை ஏற்படுத்துவேன்.

நான் பதவி ஏற்ற பின் அந்த மக்கள் வேறு எந்த மக்களுக்கும் இரண்டாந்தர மக்களாக வாழாத முறையிலே அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தியே தீருவேன் .

மேலும் அன்னத்து இன மக்களும் கௌரவமாகவும் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழக் கூடிய நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று நான் தெளிவாகவும் திடமாகவும் நம்புகிறேன்.

சிறுபான்மையாக வாழக்கூடிய மக்களிலே பாதுகாப்பையும் உரிமையையும் பெற்றுக் கொடுப்பதற்கு சிங்கள மக்களுக்கு பாரிய கடப்பாடு இருப்பதாக நான் நம்புகிறேன் என்றார் (ச-3)

# முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்காக வவுனியாவில் வாக்களிப்பு நிலையங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது முல்லைத்தீவு மாவட்ட மக்கள் வாக்களிப்பதற்காக வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் முப்பத்தேழு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அம்பாள்புரம், வவுனிக்குளம், பாண்டியன்குளம், நட்டான் கண்டல், விநாயகபுரம், துணுக்காய், உயிலங்குளம், மல்லாவி, யோகபுரம் அம்பலப் பெருமாள்குளம், புத்துவெட்டுவான் ஆகிய பதினொரு இடங்களிலும் வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மேலும் மாங்குளம் மகாவித்தியாலயத்திலும் திருமுறிகண்டி அ.த.க.பாடசாலையிலும் இரு நிலையங்களுமாக முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்காக ஐம்பது வாக்களிப்பு நிலையங்கள் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை வன்னி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை வன்னி மாவட்ட தபால் வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டுக்கள் வவுனியா செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்காக 4069 பேர் தகுதி பெற்றுள்ளனர். (2-6)

# மத்திய கிழக்கில் தொழில் புரியும் இலங்கையருக்கான ஓய்வூதியத்திட்டம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

மத்திய கிழக்கில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு ஓய்வூதியத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். இதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்குரிய ஆலோசனைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்நிய செலாவணியை நாட்டிற்கு ஈட்டிக் கொடுக்கும் தொழிலாளர்களின் சேவையை கௌரவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்கால சந்ததியினருக்காக இந்த நாடு கட்டியெழுப்பப்பட்ட வேண்டும் என மத்திய கிழக்கில் தொழில் புரியும் இலங்கையர் சிலரை அலரிமாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்த போதே இந்த விடயங்களை ஜனாதிபதி தெரிவித்தார். (2-3)

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்.
– நானோபஸ்

வலம்புரி

## பாடசாலைகளை மூடவேண்டிய அவசர தேவையுள்ளது

'டெங்கு' காய்ச்சல் வேகமாக பரவிவருகின்ற சூழ்நிலை பேரதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

நாள்தோறும் இழப்பின் துயரை குடாநாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலை டெங்கு நோயாளர்களால் முட்டி மோதுகின்றது.

மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவரும் தங்கள் இயலுமைக்கு அப்பாலும் அதி சிரத்தையுடன் சேவையாற்றுகின்ற போதிலும்,

எல்லை கடந்ததாக டெங்கு நோயாளர்கள் வைத்தியாசாலைக்கு வருவதால் எதுவும் செய்ய முடியாதுள்ளது.

அதிலும் யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்த டெங்கு மரணங்களைப் பகுப்பாய்வு செய்யும்போது சிறுவர்கள் மரணமடைவதை காணமுடிகின்றது.

எனவே இதுபற்றி பொறுப்பான வர்கள் பொறுப்பாக செயற்படவேண்டியுள்ளது.

டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்கு பல வழிகள் முன்னெடுக்கப்படவேண்டிய நிலையில், டெங்கு நோய்த் தாக்கம் வேகமாகப் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு சில நாட்கள் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க வேண்டிய தேவையுள்ளதா? என்பது குறித்து பொறுப்பானவர்கள் ஆராய வேண்டும்.

அல்லது காலை வேளையில் கடிக்கும் நுளம்புகள் டெங்கு நோயைப் பரப்புவதால் பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தில் மாற்றம் செய்ய வேண்டுமா? – என்பது பற்றியும் ஆராய வேண்டும்.

எல்லாப் பாடசாலைகளும் சுற்றுச் சூழலைப் பேணவேண்டும் என்பது நியாயமானதாயினும் எல்லாப் பாடசாலைகளினதும் சுற்றுச் சூழலை துப்புரவுப் பணி மூலமாகத் தூய்மைப் படுத்த முடியும் என்று கூறமுடியாது.

பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களின் அமைப்பு இவற்றில் செல்வாக்குச் செலுத்த முடியும்.

ஆகவே பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு சில நாட்கள் ஓய்வு விடுத்து, 'டெங்கு' தணிந்த பின் மீண்டும் ஆரம்பிப்பது பற்றி சிந்திப்பது கட்டாயமாகவுள்ளது.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க வேண்டும் எனக் கூறுவதன் மூலம் சிலர் விமர்சனங்களையும் முன்வைப்பர் என்பது தெரிந்த விடயம்.

இழப்புகளை, துயரங்களின் உணர்வுகளை அறியாதவர்களால் இந்த விமர்சனங்கள் எழும் வாய்ப்பு உண்டு.

ஆனாலும் பாடசாலைகளுக்கு இப்போது விடுமுறை வழங்குவதால் ஏற்படக்கூடிய பாடசாலை நாட்களின் இழப்புக்ளை விடுமுறை நாட்களில் ஈடுசெய்வதும் கட்டாயமானதாகும்.

எனவே பாடசாலை நாட்கள்–மாணவர்களின் கல்வி என்பனவற்றுக்கு இடையூறு ஏற்படாத வகையில் டெங்கு நோயிலிருந்து அருமந்த உயிர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க பொறுப்பானர்வர்கள் முன்வரவேண்டும்.

# கொழும்பு மகசின் சிறைச்சாலை உண்ணாவிரத கைதிகளின் நிலைமை கவலைக்குரியதாகும்

## ஐ.ம.மு. தேசிய அமைப்பாளர் பிரபா கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு நிவ் மகசின் சிறைச்சாலையில் சந்தேகத்தின் பேரில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என ஜனநாயக மக்கள் முன் னணியின் தேசிய அமைப்பாளரும், மேல் மாகாணசபை உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். உண்ணாவிரத சிறைக்கைதிகள் தொடர்பில் கருத்து தெரிவித்த பிரபா கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் கைதிகளை பார்வையிட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, நவ சிஹல உறுமய தலைவர் சரத் மனமேந்திர மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உபதலைவர் கலாநிதி சுரேஷ் கங்காதரம் ஆகியோரும் என்னுடன் கலந்து கொண்டிருந்தனர்.

இரண்டு நாட்களாக உண்ணாவிரதமிருக்கும் கைதிகளை சந்தித்தபொழுது அவர்கள் தங்களை நீதி மன்ற பிணையில் விடுதலை செய்யுமாறும் அல்லது பொது மன்னிப்பு வழங்கி, விடுதலை செய்யுமாறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மேலும் தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் போன்றவர்களையும் மற்றும் விடுதலை இயக்கத்தில் முன்னணி தலைவர்களையும் அரசாங்கம் மன்னித்து பிணையிலோ அல்லது நிபந்தனையின்பேரிலோ விடுதலை செய்திருப்பது போன்று, சந்தேக கைதிகளாகிய எங்களையும் விடுதலை செய்ய முன்வரவேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர்.

அதேபோல் உண்ணாவிரதத்தை கைவிடுவதாயின் நீதி அமைச்சர் மிலிந்த மொறகொடவின் உத்தரவாதம் தேவையெனவும் தெரிவித்தனர். களத்திலிருந்த டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன உடனடியாக அமைச்சர் மெலிந்த மொறகொடவை தொடர்பு கொண்ட பொழுது சந்தேக கைதிகளின் பெயர் விபரங்களை பெற்றுத் தருவோமாயின் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளையில் சட்டமா அதிபரை தொடர்பு கொண்ட பொழுதும், அவருடனான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள் முடியாதிருந்தது. மேலும் கைதிகள் மத்தியில் உரையாற்றிய பிரபா கணேசன், எமது தலைவர் மனோ கணேசன் எம்.பி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு திருகோணமலை, மட்டக்களப்பு சென்றிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே உங்களது உண்ணாவிரதத்தை நிறுத்த சொல்வதற்காகவோ அல்லது தொடர்ந்து செயற்படுத்த சொல்வதற்காகவோ இங்கு நாங்கள் வரவில்லை.

மாறாக உங்களது விடுதலை சம்பந்தமான முழுமையான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஒரு முன்னோட்டமாகவே நாங்கள் உங்களை சந்திக்கவந்துள்ளோம். இந்த உண்ணாவிரதத்தை நிறுத்துவதோ அல்லது கைவிடுவதோ உங்களது ஜனநாயக உரிமையாகும். உங்களது விடுதலைக்காக ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுப்போம். அதேவேளை ஆட்சி மாற்றம் ஏற்படுமாயின் முதல் வேலையாக உங்களது விடுதலை சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உறுதியளித்திருந்தார்.

(ச–5)

# வடமாகாண ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் கல்வி அமைச்சருடன் விஷேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தினர் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, கல்வியமைச்சின் செயலாளர் எச்.வி.ஜி.பண்டார ஆகியோரை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தலைவர் சி.ஞானாகரன், சங்க செயலாளர் மு.நடராசா ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அமைச்சரின் இசுறுபாய விஷேட செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தினால் ஆசிரியர்களுடைய முக்கிய பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டதாக சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை உண்ம்ம நிலைவரங்களை எழுத்துமூலம் பெற்றுக் கொள்வதற்காக இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் அனைத்து வடமாகாண ஆசிரியர் சங்க பிரதிநிதிகளையும் தத்தமது கோரிக்கை மனுக்களுடன் தவறாது சமுகம் தருமாறு சங்கத்தின் தலைவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

(ச–4)

## டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ். கல்வி வலய சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இன்று வியாழன் பி.ப 2.00 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையில் டெங்கு நோய் தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கு இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## நிறுவனத் தலைவர்களிற்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்


(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களின் தலைவர் களுக்கான கண்காணிப்புக்குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவினருடன் விசேட கலந்துரையாடல் இடம்பெற உள்ளதால் சகல நிறுவனத் தலைவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ச)

# சாயியின் கருணை



பகவான் சத்திய சாயி சமித்தியினரால் நடாத்தப்படும் பாலவிகாஸ் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் வி.விஸ்ணுஜன் என்பவர் தன்னுடைய வாழ்வினில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றை கொக்குவில் சாயி சமித்தியில் நடந்த விழா ஒன்றில் எடுத்துரைத்தார்.

எனது வாழ்க்கையில் நான் பாலவிகாஸ் வகுப்புகளுக்கு போகத் தொடங்கியதில் இருந்து பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவை தினந்தோறும் காலையிலும், மாலையிலும் வழிபட்டு வருவது வழக்கம். பாலவிகாஸில் சொல்லித்தந்தபடி என் காலைப் பிரார்த்தனை அமையும். ஓம்காரம் , காயத்திரி மந்திர உச்சாடனம் , சுலோகம் சொல்லுதல், தியானம் இவையெல்லாம் என் பிரார்த்தனையில் அடங்கும்.

ஒரு நாள் நான் பாடசாலையால் வந்து பகவானை பிரார்த்தித்து விட்டு சுவாமி அறையில் இருந்து வெளியே வந்த போது யாரோ என்னை கூப்பிடுவது போல் இருந்தது. நான் வீட்டுக்கு வெளியே வந்தபோது ஒருவரையும் காணவில்லை. திரும்ப உள்ளே போன போது மீண்டும் என்னை அழைப்பது போன்ற குரல் கேட்டது. நான் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மேலே வானத்தைப் பார்த்தேன். பகவான் பாபா இரண்டு கைகளாலும் ஆசீர்வதித்தபடி எனக்குக் காட்சி தந்துகொண்டிருந்தார். இக்காட்சியில் என்னுடல் மெய் சிலிர்த்தது. அத் தரிசனத்தைப் பார்த்து மெய் மறந்து நின்றேன். என் அம்மாவைக் கூப்பிட்டுக் காட்டினேன். ஆனால் அவர் பார்வைக்குத் தெரியவில்லை.

அக்காட்சிமறைந்ததும்திரும்ப சுவாமி அறைக்குள் சென்று பகவானை தரிசித்து விட்டு நின்ற போது மீண்டும் அதே குரல் " நீ விரைவில் புட்டபர்த்தி வருவாய்" என்று பகவானின் படத்தில் இருந்து ஒலித்தது.

இந்த அற்புதத்தை எனது பெற்றோருக்கும் நண்பர்களுக்கும் சொல்லி மகிழ்ந்தேன்: அந்த நேரம் நாம் வீடு மாறுவதற்கு உத்தேசித்த காலம். இந்நிகழ்விற்கு இரண்டு கிழமைகள் கழித்து பாலவிகாஸ் வகுப்பு எந்த வீட்டில் நடைபெற்றதோ அந்த வீட்டிற்கே நாங்கள் குடிவந்து விட்டோம். இதுவும் பகவானின் விருப்பம் போலும். எதுவும் அவர் சங்கற்பம் இன்றி நடவாது.

பாலவிகாஸ் மாணவர்களே ! நீங்கள் இங்கு கற்பது பகவான் போதிக்கும் கல்வி. உள்ளார்த்தமாக இதை நீங்கள் கற்றுக்கொண்டு வாழ்க்கையில் அனுசரித்து வந்தால் நீங்களும் தரிசிப்பது உண்மையில் நிகழும். அவர் தரிசனத்தைப் பெற அவர் பாதக்கமலங்களில் சரணடைவோம்.

ஜெய்சாயிராம் யாதவன்

# ஹெட்ஜின் முரண்பாட்டுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஹெட்ஜின் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் அரசாங்கத்திற்கும் வெளிநாட்டு வங்கிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த பிணக்கு சுமூகமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டமா அதிபர் மொஹான் பீரிஸின் தலைமையிலான குழுவினருக்கும் குறித்த வெளிநாட்டு வங்கிப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாகவும் டச்சு வங்கி, சிட்டி வங்கி மற்றும் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி ஆகியனவற்றுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள விருப்பமில்லை என வங்கிகள் தெரிவித்துள்ளன.

சர்வதேச வர்த்தக விதிகளை மீறிச் செயற்பட்டதாக தெரிவித்து குறித்த வங்கிகள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

மேலும் பெருந்தொகைப் பணத்தை நட்டஈடாக வழங்க வேண்டுமென கோரியிருந்தது.

சர்வதேச நீதிமன்றங்களில் வங்கிகளுக்கு ஆதரவாகவே தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இரு தரப்பு உறவுகளைக் கருத்திற் கொண்டு பிரச்சினையை சுமூகமாக தீர்த்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2-6)

# ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு இரு பிரதான வேட்பாளர்களிடமும் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஊடக சுதந்திரம், ஊடக ஜனநாயகம் ஆகியவற்றை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி ஊடக அமைப்புகள் இரண்டு பிரதான வேட்பாளர்களிடமும் பிரகடனம் ஒன்றை கையளித்துள்ளதாக சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனில் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு இதழியல் கல்லூரியில் இடம்பெற்ற ஊடகவியாலளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் யாப்பில் மனித உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தகவல் அறியும் சுதந்திரம் குறிப்பிடப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய சுனில் ஜயசேகர மனித உரிமைகள் கூட மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவும் அவற்றை உறுதிப்படுத்த அரசாங்கம் ஏற்பாடுகள் எதனையும் செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

கடந்த காலங்களில் ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், சிபாரிசுகள் எல்லாம் கைவிடப்பட்டுள்ளது. கைவிடப்பட்ட சிபாரிசுகள் , உடன்படிக்கைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய பிரகடனம் ஒன்று பிரதான பொது வேட்பாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட சுனில் ஜயசேகர வெற்றி பெறும் வேட்பாளர் இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (2-6)

# தடுப்புக்காவலில் உள்ள 600 தமிழ் இளைஞர்களில் 60 பேரை விடுதலை செய்ய உத்தரவு

தென்னிலங்கை சிறைகளில் உள்ள 600 தமிழ அரசியல் கைதிகளில் 60 பேரை விடுதலை செய்யுமாறு நீதி ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படாது பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 600 இற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களில் 60 பேரை விடுதலை செய்யுமாறு நீதித்துறை ஆணையாளர் திணைக்களம் நீதி அமைச்சை கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விடுதலை செய்யுமாறு கேட்கப்பட்டுள்ள 60 பேரும் பல வருடங்களாக குற்றம் எதுவும் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (2-6)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

Learn French the French Way French Classes

சர்வதேச மொழியான **French** மொழி யாழ்ப்பாணத்தில் French Emabassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாணவர்கள், அலுவலர்கள், வெஷிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(170)

# அதிபர்கள் சேவை, ஆசிரியர்கள் சேவைகளுக்கான சம்பள மறுசீரமைப்பு சுற்றறிக்கை

**அரசாங்க நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் இலங்கை அதிபர்கள் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர்கள் சேவை என்பவற்றின் சம்பள மறுசீரமைப்பு தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் இங்கு தரப்படுகிறது.**

01.மேலே கூறப்பட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட் 2006.04.25 ஆம் திகதியிடப்பட்ட 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பாலும் மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக மறுசீரமைப்பு செய்து வெளியிடப்பட்ட 06/2006 (i) இலிருந்து 06/2006 (vii) வரை இலக்கமிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பாலும் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது..

02.இலங்கை அதிபர்கள் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர்கள் சேவை என்பவற்றுக்காக அமுல்படுத்தப்பட்ட 2007.08.24 ஆம் திகதியதும் 06/2006 (iv)ஆம் இலக்கம் கொண்டதும் 2007.06.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெற்றுள்ளதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரிஎஸ் (TS) 1/2006 (ஏ), ரிஎஸ் (TS) 2/2006 (ஏ), ரிஎஸ் (TS) 3/2006(ஏ) என்ற சம்பள அளவுத் திட்டத்தை தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய 2008.07.01 ஆம் திகதியிலிருந்து புதிய குறியீட்டு இலக்கங்கள் மற்றும் புதிய தர முறைமை என்பவற்றுடன் பின் வரும் முறையில் அவற்றை மறுசீரமைத்து அமுல்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

03. பொதுக்கல்வி (அதிபர்கள்) சேவை, பொதுக்கல்வி (ஆசிரியர்கள்) சேவை என்பவற்றின் சம்பள மறுசீரமைப்பு.

03.1 அதிபர்களின் சேவை, ஆசிரியர்களின் சேவை என்பவற்றின் பிரமாணங்கள் மேலே பிரேரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களுக்கு முரணாகாது மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மறுசீரமைப்பு சேவைப் பிரமாணங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும் உள்ளீர்ப்புக்குப் பின்னரே ஏற்புடைய சம்பளங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

| 06/2006(IV)இற்கு அமைய தரம்/வகுப்பு | சம்பளக் குறியீட்டு இல: | புதிய தரம்/ வகுப்பு | மறுசீரமைக்கப்பட்ட சம்பள குறியீட்டு இல: |
|---|---|---|---|
| இலங்கை அதிபர்களின் சேவை<br>வகுப்பு 3<br>வகுப்பு 2 தரம் II<br>வகுப்பு 2 தரம் I<br>வகுப்பு I | ரி.எஸ் 3-2006 (ஏ) | பொதுக்கல்வி (அதிபர்) சேவை<br>வகுப்பு 3<br>வகுப்பு 2<br>வகுப்பு 1 | பொ.க.4-2006 |
| இலங்கை ஆசிரியர்கள் சேவை<br>வகுப்பு 3 தரம் II<br>வகுப்பு 3 தரம் I | ரி.எஸ் 1-2006 (ஏ)<br>ரி.எஸ் 2-2006 (ஏ) | பொதுக்கல்வி(ஆசிரியர்) சேவை<br>வகுப்பு 3 தரம் II<br>வகுப்பு 3 தரம் I சி<br>வகுப்பு 3 தரம் I பி<br>வகுப்பு 3 தரம் Iஏ | பொ.க.1-2006<br>பொ.க. 1-2006 |
| வகுப்பு 2 தரம் II<br>வகுப்பு 2 தரம் I<br>வகுப்பு I | ரி.எஸ் 2-2006 (ஏ) | வகுப்பு 2 தரம் II<br>வகுப்பு2 தரம் I<br>வகுப்பு I | பொ.க.2-2006 |
| | | அதி உயர் வகுப்பு | பொ.க.3-2006 |

03.2. உள்ளீர்ப்பின் சம்பள மாற்றியமைப்பு நோக்கத்திற்காக மட்டுமே உள்ள அட்டவணை IIஇல் குறிப்பிடப்பட்ட மீளமைப்பு சூசிகளும் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்ட சம்பளங்களும் உள்ளீர்ப்பின் பின்னரே அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

03.3.இலங்கை ஆசிரியர்கள் சேவையில் வகுப்பு 2 தரம் II இற்கு பதவியு யர்த்தப்பட்டுள்ளதும் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள்துமான ஆசிரியர்களின் உள்ளீர்ப்பில் அவர்களுடைய தகைமைகளில் தரத்திற்கு ஏற்புடையதான சம்பளப்படிகளில் அவர்களை அமர்ததும் நோக்கத்திற்காக ஆரம்ப சம்பளப்படி நிலை பின்வரும் முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

04. ஏற்புடைய சம்பளப் படிகளின் அடிப்படையில் சம்பள மாற்றியமைப்பு மேற் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் ஓய்வு பெறுநர்களின் சம்பளங்கள் 2008.07.01 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்.

05.இது தொடர்பான மேலும் தெளிவாக்கல் மற்றும் அறிவித்தல்கள் என்பனவற்றுக்கான எந்தக் கோரிக்கைகளும் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

06. புதிய சம்பளத்திட்டம் 2008.07.01 ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வண்ணம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.


| ஆசிரியர்களின் வகுதிகள் | பொ. க. 2-2006 சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைய வகுப்பு 2 தரம் II இற்கான ஏற்புடைய ஆரம்ப சம்பளப் படி | |
|---|---|---|
| | படி இல | படி |
| 1. வகுப்பு 3 தரம் I இலிருந்து வகுப்பு 2 தரம் II இற்கு பதவியுயர்த்தப்படும் ஆசிரியர்கள் | 01 | ரூபா.16 100/- |
| 2. ஆசிரியர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தையும் ஆசிரியர்கள் பயிற்சியையும் பெற்றுள்ள ஆசிரியர்கள் | 02 | ரூபா.16 340/- |
| 3. ஆசிரியர்கள் சேவைப் பிரமாணக்குறிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு பட்ட நிலைப்பின் பட்டம் தகைமைகளையும் பட்ட நிலைப்பின் டிப்புளோமா (கல்வி) தகைமைகளையும் அல்லது கல்வி (சிறப்பு) மாணி தகைமைகளையும் பெற்றுள்ள ஆசிரியர்கள் | 03 | ரூபா.16 580/- |
| 4.பட்டநிலைப்பின் பட்டத்துடன் சம்பந்தப் பட்ட பாடமொன்றுடனான பட்ட தகைமையையும் பட்டநி லைப் பின் டிப்புளோமா (கல்வி) தகைமைகளையும் பெற்றுள்ள ஆசிரியர்கள் | 04 | ரூபா.16 820/- |


**செல்வ குமார்**

இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.






ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணித் தலைவருமான பசில் ராஜபக்ஷ விமான நிலையத்திலிருந்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அழைத்து வரப்படுவதையும் அவர் பலாலியில் ஒலி, ஒளி பரப்புச் சேவைகளை ஆரம்பித்து வைப்பதையும் முதல் உள்ள படங்களிலும்,வேலணையில் இடம்பெற்ற கூட்டத்தில் பசில் எம்.பி., அமைச்சர் டக்ளஸ் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் கீழுள்ள படங்களி லும் பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள் கையளிக்கும் நிகழ்வில் ஈடுபட்டிருப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.


# கண்ணீர் அஞ்சலி

எங்கள் அன்பு நண்பன் திரு.ஜோன்சன்

( ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை) அவர்களின்

அன்பு மழலைச் செல்வம்

## ஜோன்சன் சஜினிகா

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.



வேர் பரப்பி விழுது விட்டு
விருட்சமாய்
.......
எங்கள் கனவுகள்
ஒரு நொடிப் பொழுதில்
உடைந்து போனது
........

அன்னையின் அரவணைப்பில்
18 ⚜ 05 ⚜ 2005

ஆண்டவன் அரவணைப்பில்
05 ⚜ 01 ⚜ 2010

**எங்கள் பிரியமான சஜினிகா,**

இறைவனுக்கு உன்மீது அதிக அன்பு, அதனால் அவன் தன்னிடம்
அழைத்துக் கொண்டான். ஆத்மா சாந்தி பெறுக!

அன்பு நண்பர்கள்:
தே.ஜெயகுமார், க.திருமாலழகன், ந.விஜயசுந்தரம்

# ஏ-9 ஊடாக 24 மணிநேர போக்குவரத்து...

மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மார்க் ஆகியோர் கீரிமலை தீர்த்தக் கேணியையும் சென்று பார்வையிட்டனர்.

தொடர்ந்து இக்குழுவினர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்த்த தெரிவு செய்யப் பட்ட மக்களுக்கான கொடுப்பனவை வழங்கும்வைபவத்தில்கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தில் வலி.வடக்கு உயர்பாது காப்பு வலயப் பகுதிக்கு தெற்கே உள்ள 600 மீற்றர் முன்னரங்கப் பகுதியில் 300மீற்றரில் மீள்குடியமர்த்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 509குடும்பங்களை சந்தித்து ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா மீள் குடியேற்ற நிதியுதவி வழங்கப்படுமென பசில் ராஜபக்ஷ அறிவித்தார்.

இதில் முதல் கட்டமாக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கி வைத்தார். அத்துடன் மீள்குடியமரும் குடும்பங்களின் பெரியவர்களுக்கும் மாணவர்களுக்குமாக ஆயிரம் துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார். தொடர்ந்து யாழ்.வீரசிங்கம் மண்ட பத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமாசங்களின் பிரதிநிதிகள், சமூகப்பிரதிநிகளைச் சந்தித்து கலந்துரையாடினர். இந்நிகழ்விற்கு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து வேலணைக்கு விஜயம் செய்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜ பக்ஷ ஆகியோர் தீவக கடற் தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களையும் 2கூலர் வாக னங்களையும் வழங்கி வைத்தனர். அத்துடன் தீவக கடற்தொழிலாளர்களின் அபிவிருத்திக் கென 20மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்வதாகவும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ பின்வரும் அறிவிப்புகளை விடுத்தார்.

★ ஏ-9வீதியூடாக நேற்று நள்ளிரவு முதல் 24 மணிநேரமும் பயணங்களை மேற்கொள் வதற்காக முழுமையாகத் திறக்கப்படும்.

★ வன்னி இறுதிக்கட்ட மோதல்களில் சரணடைந்த 10ஆயிரத்திற்கு மேற்பட்ட போரா ளிகளில் ஆயிரம் பேர் புனர்வாழ்வு வழங்கப் பட்டு நாளை விடுவிக்கப்படுவதாகவும் ஏனை யோர் படிப்படியாக விடுவிக்கப்படுவர்.

★ எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ள பலாலி, வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு, அரியாலை, தென்மராட்சி, கொழும்புத்துறை ஆகிய பிரதேசங்களில் 75 வீதமான இடங்களில் மக்களை உடனடியாக மீள்குடியமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

★ வீதித்தடைகள் உட்பட பாதுகாப்பு கெடுபிடிகள் அனைத்தும் நீக்கப்படும்.

ஆகிய அறிவிப்புகளை விடுத்தார் பசில் எம்.பி.

**வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலய மீள் குடியேற்றப் பகுதி**

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் தெல்லிப்பழை தொடக்கம் காங்கேசன்துறை வரையுள்ள கே.கே.எஸ் வீதி மேற்குப் புறமும், யாழ்.-பலாலி வீதி கிழக்கு புறமும், வலி வடக்கு தென் பகுதியும் மக்கள் மீள்குடியமர்த்துவதற் கான அனுமதியை ஜனாதி பதி மஹிந்த ராஜ பக்ஷ எதிர்வரும் 10 ஆம் திகதி நேரில் வந்து வழங்குவார் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## கிழக்கு மாகாண...

முரளிதரன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்த விதமான முடிபினை எடுத்தாலும் யாருக்கு ஆதரவளித்தாலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு தமது ஆதரவினை வழங் குவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# மகிந்தவின் மற்றொரு ஆட்சியை...

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை வருமாறு,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பேசும் மக்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்புமிக அக்கறையுடன்பரிசீலித்துள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு பலதடவைகள் சந்தித்து பரிசீலித்தது. தமிழ் பேசும் மக்களின் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் புத்திஜீவிகள், சிரேஷ்ட பிரஜைகள், இளைஞர்கள், நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரின் கருத்துக்களை அறிவது குறித்து அவர்களுடன தீவிர கலந்துரையாடல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தியுள்ளது.

பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்க ஆகியோருடன் நாம் கலந்துரையாடல்களை நடத்தி தமிழ் பேசும் மக்களின் உடனடித் தேவைகள் குறித்தும் தேசியப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றை காணுவது குறித்தும் அவர்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொண்டோம்.

**ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக்கு எதிர்ப்பு**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒரு தடவைபதவிவகிப்பதற்கானஆணையை இத்தேர்தல் மூலம் கோரி நாட்டு மக்களிடம் விண்ணப்பித்திருப்பதற்கு ஆதரவளிக்க முடியாது மற்றும் ஆதரவளிக்கவும் கூடாது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். இம் முடிபு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நான்கு ஆண்டு கால பதவிக்காலத்தின் செயற்பாடுகளை வைத்தும் அவருடன் நாம் நடத்திய பல கலந்துரையாடல்களின் பெறுபேற்றுகளை ஸ்வைத்தும் எடுக்கப்பட்டதாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் இந் நடவடிக்கைகள் நாட்டில் வாழுகின்ற மக்கள் இடையே இன ஒற்றுமையை கட்டி எழுப்புவதற்கும் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு ஊக்கமளிப்பதாகவும் அமையாது. கடந்த நான்கு ஆண்டுகளாக ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை தேசியப் பிரச்சினைக்கு காணுவதில் ஏற்படும் தாமதம், தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப் பாரம்பரிய வாழ்விடம் தொடர்பான மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மறைமுக நிகழ்ச்சி நிரலை நடைமுறைப் படுத்தவே ஆகும்.

தமது தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்காக தமிழ் மக்களின் ஜனநாயகத் தீர்ப்பை முற்றாகப் புறக்கணித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முற்றாக ஓரங்கட்டி, தன்னிடம் அடிபணிந்து போக தயாராக இருக்கும் நபர்களை தமிழ் மக்களின் தலைவர்களாக வெளிக்காட்டும் நிகழ்ச்சி நிரலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னெடுத்து வருகிறார். அவ்வாறான நபர்களுடன் மாத்திரமே வேலை செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தயாராக இருக்கிறார்.

இதன் மூலம் தமிழ் மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகளை மாத்திரமல்ல தமிழ் மக்களையே புண்படுத்தியுள்ளார். அவர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டால் ஏற்றுக் கொள்ளமுடியாத இந்நிலைவரம் தொடரவே உதவும்.

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விசயங்களில் ஜனாதிபுதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடு கவலை தருவதாகவுள்ளது. சட்டத்திற்கு அப்பாற்பட்ட கொலைகள் மற்றும் கட்டாயப்படுத்தி காணாமல் போகச் செய்தல் ஆகியன சர்வசாதாரணமாக இடம் பெற்றிருக்கின்றன. இவற்றால் மோசமாகத் தமிழ் மக்கள் தான் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்சி அதிகார அமைப்புகள் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அரசமைப்பு கட்டுப்பாட்டு விதிகள் தொடர்பான உரிமைக்கட்டளைகள் மீறப்பட்டுள்ளன. சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தல் முற்றாக வீழ்ச்சி அடைந்துள்ளது. ஊழல் கட்டுக்கடங்காமல் போயுள் ளது. சட்டம், ஒழுங்கு மற்றும் நல்லாட்சி ஆகியன கீழ் மட்டத்திற்கு சென்று விட்டன. நாட்டில் உள்ள அனைத்து மக்களும் இத் துக்கரமான நிலைவரத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் பேசும் மக்கள் தான் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**தமிழ்க் கூட்டமைப்பின் ஏகோபித்த முடிபு**

இக் காரணங்களுக்காகத்தான் மேலும் ஒரு தடவை பதவி வகிப்பதற்கான ஆணையைத்தருமாறு, ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ விடுத்துள்ள கோரிக்கையை ஆதரிக்க முடியாது என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ஏகோபித்த அபிப்பிராயமாக இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரு பிரதான வேட்பாளர்களில் எவரையுமே ஆதரிக்கக் கூடாது என்ற கருத்தை கொண்டிருப்பதை நாம் உணர்ந்த போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஜனாதிபதி ராஜபக்ஷ தனது பதவிக் காலத்தை நீடிப்பதற்கு மீண்டுமோர் ஆணையைப் பெறுவதற்கான விருப்பத்தை தடுப்பதற்கு பொது எதிர்க்கட்சி வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதே பொருத்தமானது என கருத்தப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் ஒரு தடவை பதவியில் இருக்க அனுமதிப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏகோபித்து எதிர்ப்பதனால் பொது எதிர்க்கட்சி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்க வேண்டுமென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ச-5)

## வடக்கு...

கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கியுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டும். இயல்பு வாழ்க்கையும் பொதுநிர் வாகமும் வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அவசரக்காலச்சட்டம் நீக்கப்பட்டு தடுப்புக்காவலில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளை உடனடி நிபந்தனைகளாக முன்வந்துள்ளது கூட்டமைப்பு.

மேலும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு மேற்கொள்ளப்பட்டு ஒரு அலகாகக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நிபந்தனை யையும் கூட்டமைப்பு பிரதானமாக முன் வைத்திருந்தது. இந்த கோரிக்கைகளை பொன்சேகா ஏற்றக்கொண்டுள்ளதாகவும் எனினும் சில உடன்பாடுகள் இரகசியமாக பேணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# வடக்கு-கிழக்கு மீண்டும்...

வருவதாக அவர் தெரிவித்துள்ளார் பொதுவாக ஓர் நிலைப்பாட்டையும் வடக்கு-கிழக்கில் மற்றுமொரு நிலைப்பாட்டையும் எதிர்க் கட்சிகள் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கில் தாம் பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் சில சக்திகள் வடக்கு கிழக்கு இணைக்கப்படும் எனத் தெரிவித்து வாக்கு வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்தல், பௌதிக ஒருமைப்பாட்டைபாதுகாத்தல் மற்றும் மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தல் போன்றவையே தமது பிரதான இலக்குகள் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# பொன்சேகா-கூட்டமைப்பு...

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அண்மைக்காலமாக ஜெனரல் சரத் பொன் சேகாவுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் இதில் இவர்கள் பல விடயங்கள் தொடர்பாக உடன்பாட்டுக்குவந்துள்ள தாகவும் குறிப்பிட்ட அவர் இதில் சதித்திட்டங்கள் காணப்படு வதாகவும் குறிப் பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்தத்தின் மூலம் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக மேற்குலக நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை இதன் மூலம் நன்கு புலனாகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டாள ரான உருத்திரகுமார் விடுதலைப்போராட்டம் புதியவடிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளமை இதுதானோ என நாம் கருதுகின்றோம். அத்துடன் கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் களை விடுவித்தல், அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புதல், அரசாங்கத்தின் புலனாய்வுப்பிரிவை குறைத்தல், வடக்கையும்கிழக்கையும்ஒன்றிணைத்தல், வடக்கு கிழக்கிலுள்ள இராணுவத்தினரையும் பொலிசாரையும் குறைத்தல், அதியுயர் பாதுகாப்பு வலயங் களை குறைத்தல் போன்ற நிபந்தனைகளுக்கு சரத் பொன் சேகா ஒன்றுபட்டுள்ளமையானது விடுதலைப் புலிகளின் அடுத்த கட்ட போராட்டத்திற்கு வழியமைக்குமோ என சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள பயங்கரவாதிகள் மத்தியில் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட வேண்டியவர்கள் இருப்பதாக அன்று வாஷிங்டனில் வைத்து கருத்து தெரிவித்த சரத் பொன் சேகா, இன்று தனது நிலைப்பாட்டை தேர்தலுக்காக மாற்றிக் கொண்டு இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கிறார்.

இதன் மூலம் இந்த நாட்டில் பயங்கரவா தம் மீண்டும் தலை தூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அவர் அச்சம் வெளியிட்டார். (ச-5)

## டெங்கு...

நிலையில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் மரணமடைந்துள்ளார்.பிரஸ்தாப மாணவன் கடந்த டிசம்பர் மாதம் இடம் பெற்ற க.பொ.த. சாதாரண தரம் பரீட்சைக்கு தோற்றியமை குறிப்பிடத்தக்கது. (ச-7)


## கண்ணீர்க் காணிக்கை

### பிரம்மஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் இராமநாதக்குருக்கள்



கடந்த 04.01.2010 அன்று ஐயப்பன் பாதம் சரணம் அடைந்தார். கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபையின் அங்கத்தவர்களான பாஸ்கரசர்மா, தயாபரசர்மா, ஜெயபால சர்மா, ரவீந்திரசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் எமது சம்பந்தியும் ஆகிய அவரது ஆத்மா சாந்தியடையவும், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து ஐயனை பிரார்த்திக்கிறோம்.

நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்
ஸ்ரீ ஐயப்ப மணிகண்டசபை
2010 யாத்திரை குழுவினர்.

(314)



பிரிவு-I
ஆரம்பித்துவிட்டோம்
A/L-2012
கலை, வர்த்தகப்பிரிவு
பிரிவு-II
ஜனவரி-9இல்
நேரம் 8.00 A.M
பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-4154)



## ST.JOHN'S COLLEGE,JAFFNA
## VACANCIES FOR TEACHERS

Applications are invited from suitable applicants for the following:

1.Chemistry
2.Accounts (English Medium A/L)
3.Maths (English Medium A/L)
4.English
5.Logic

The last date for receiving applications is 11th January 2010.Sports & IT skills will be an advantage.Apply with full bio-data and photocopies of certificates-Degree/Diploma

The applications will be short listed and called for interview.

**The Principal**

(C-4155)



## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### வேலுப்பிள்ளை மோகனநாதன்

(அதிபர், யா/அராலி இந்துக் கல்லூரி)

யாழ். பல்கலைக்கழக, கணித புள்ளிவிபரவியற் துறையின் விரிவுரையாளர் மோ. கோகுலனின் அன்புத் தந்தையார் வேலுப்பிள்ளை மோகனநாதன் அவர்கள் காலமானதையிட்டு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
கணித புள்ளிவிபரவியற் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(308)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.